SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:4, Issue:02, Pages:56
SEPTEMBER-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2024,
விலை ரூ.20/-



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்

16-09-2024 முதல் 18-09-2024 வரை



# திருமலையப்ப ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம் 2024 அக்டோபர் 04 முதல் 12 வரை

**04-10-2024**
வெள்ளிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**05-10-2024**
சனிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**06-10-2024**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**07-10-2024**
திங்கட்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**08-10-2024**
செவ்வாய்க்கிழமை
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**09-10-2024**
புதன்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : தங்கத்திருத்தேர்
இரவு : யானை வாகனம்

**10-10-2024**
வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**11-10-2024**
வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**12-10-2024**
சனிக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



ஸ்த்திதே மநஸி ஸுஸ்வஸ்த்தே ஸரீரே ஸதி யோ நர
தாதுஸாம்யே ஸ்த்திதே ஸ்மர்த்தா விச்வரூபஞ்ச மாமஜம்
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட்டபாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

மனம் கலக்கம் இன்றி நிலை நிற்கையில், உடம்பு நோயற்று நன்று இருக்கையில், வாதம், பித்தம், க்லேஷம் என்னும் மூன்று தாதுக்களும் ஓரளவாய் இருக்கையில், எந்த மனிதன், உலகை உடம்பாக உடையவனும், பிறப்பு முதலான விகாரங்கள் இல்லாதவனுமான என்னை நினைக்கிறானோ, பிற்காலத்தில் கட்டையோடும், கல்லோடும் ஒத்தவனாய் மரணம் அடையா நிற்கிற அந்த என் பக்தனை நான் நினைக்கிறேன். உயர்ந்த பதவியை அளித்து அழைத்துச் செல்கிறேன்.

*- வராக சரம சுலோகம்*



நாஸதோ வித்$_3$யதே ப$_4$ாவோ
நாப$_4$ாவோ வித்$_3$யதே ஸத: ।
உப$_4$யோரபி த்$_3$ருஷ்டோடந்தஸ்-
த்வநயோஸ்தத்த்வத$_3$ர்சிபி$_4$: ॥

இல்லாததற்கு இருப்பது என்பது இல்லை. மேலும், உண்மையாக இருப்பதற்கு இல்லாமை என்பதும் இல்லை. இந்த இரண்டின் தத்துவமும் தத்துவ ஞானிகளால் கண்டறியப்பட்டது.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–16*

## ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு...

- "ஸப்தகிரி" திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வெளியிடப்படும் சமய மாத இதழ்.
- "ஸப்தகிரி" இதழில் பல ஆன்மீகத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.
- "ஸப்தகிரி" இதழ் தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் வெளிவருகின்றன.
- "ஸப்தகிரி" இதழின் ஆண்டுச்சந்தா ரூ.240/-, ஆயுள் சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள் மட்டும்), அயல்நாட்டுச் சந்தா ரூ.1,030/-
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை டி.டி., இ.எம்.ஒ., ஐ.பி.ஓ. மற்றும் இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in) வாயிலாக அனுப்பலாம்.
- "ஸப்தகிரி" இதழிற்கான சந்தாவினை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு வரைவோலை எடுத்து, "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக்கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
- "ஸப்தகிரி" சந்தாதாரர்கள் தங்களுடைய பெயர், முகவரி, அஞ்சல் எண், கைபேசி எண், தேவையான மொழி முதலியவற்றைச் சரியாக குறிப்பிடவும்.
- "ஸப்தகிரி" இதழ் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாதவர்களும், முகவரி மாற்றம் செய்ய வேண்டியவர்களும் "chiefeditortpt@gmail.com" எனும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.
- மேலும் தகவல்களுக்கு "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், 2வது தளம், தி.தி.தே. அச்சகக் கட்டிடம், கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507" எனும் முகவரியில் அலுவலகப் பணி நாட்களில் நேரில் அணுகலாம்.

அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியில் திருமலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள்

மேலும் தகவல்களுக்கு 0877-2264543, 2264359



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி


சமய மாத இதழ்

செப்டம்பர் 2024

மலர் 04
இதழ் 02


## உள்ளுறை


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| வளமான வாழ்வை அருளும் வராஹப்பெருமான் - கவிஞர் திரு.கே.எஸ்.மணி, செஞ்சிக்கோட்டை. | 7 |
| வாமனரை வரவேற்கும் பூக்களம் - முனைவர் பா.காயத்ரி, சென்னை. | 10 |
| சங்க இலக்கியங்களில் பலராமர் - முனைவர் பிரியாகிருஷ்ணன், சென்னை. | 13 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: திருமலையப்பனுக்கு மங்களாசாசனம் - பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி. | 15 |
| புண்ணியங்களை புரட்டித் தரும் புரட்டாசிப் படையல் - டாக்டர் இரா.அருண்குமார், புதுச்சேரி. | 18 |
| தினமும் ஆதிசேஷன் வழிபடும் வேங்கடவன் - திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியன், கல்லிடைக்குறிச்சி. | 22 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: நித்திய சூரியாய் மாறிய சுமந்திரர் - திரு.எஸ். ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 25 |
| விநாயகரின் சிறப்புகள் - திருமதி கே.சுப்புலெட்சுமி, பரமக்குடி. | 31 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு.எம்.எஸ். சுகுமார், சென்னை. | 34 |
| உஜ்ஜ்வல வேங்கடநாத ஸ்தோத்ரம் - டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன், திருப்பதி. | 36 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 38 |
| 108 திவ்யதேச வைபவம் : வைகுண்டநாதர் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 40 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: கங்கை விநாயகர் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 43 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 44 |
| ராசிபலன்கள் : செப்டம்பர் 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 46 |
| நீதிக்கதை : தர்மம் செய்! அதையும் அன்றே செய்!! -திரு.அசோக் ராஜா, அரவகுறிச்சிப்பட்டி. | 47 |
| சிறுவர் உலகம் : பல்சுவை பகுதி | 49 |
| சித்திரக்கதை : வேங்கடவனே சாட்சி | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.

பின்னட்டை : ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி.


சிறப்பு ஆசிரியர் :
திரு. J. சியாமளா ராவ், ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. P. ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்



# பேறுகள் அனைத்தையும் அருளும் பித்ரு வழிபாடு

"அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்" என்பது காலங்களைக் கடந்து நிற்கும் பேருண்மையாகும். நமது வணக்கத்துக்கு உரியவர்கள் யார் யார் என்பதற்கு "மாதா, பிதா, குரு, தெய்வம், அதிதி" என்ற வரிசை முறைபடி *"மாத்ரு தேவோ பவ: பித்ரு தேவோ பவ: ஆசார்ய தேவோ பவ: அதிதி தேவோ பவ:"* என்கிறது வேதம்.

அதே சமயம், உலகப் பொதுமறையாகிய திருக்குறளை அருளிய தெய்வப் புலவர் திருவள்ளுவர் நாம் போற்ற வேண்டியவர்களாகப் பரிந்துரைத்திருக்கும் வரிசைக் கிரமத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. அதாவது,

*"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தானென்றுஆங்கு*
*ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை"*

என்கிறார். "இல்லறம் என்னும் நல்லறத்தில் ஈடுபடுகின்ற ஒருவன் தென்புலத்தார் எனப்படும் பித்ருக்களையும், அவரவருக்குரிய வழிபடு தெய்வத்தையும், விருந்தினர்களையும், சுற்றத்தினரையும் உபசரித்துப் போற்றி வணங்குவதுடன், இந்நால்வகையினரையும் போற்றி வணங்கக்கூடிய தன்னுடைய நலத்தையும் பேணிக்காத்திட வேண்டும்" என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும்.

நம் ஒவ்வொருவருடைய பெற்றோரும், அவர்களுக்கு முன் பிறந்து இவ்வுலகை நீத்த முன்னோர்களும் வடமொழியில் பித்ருக்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் பிரம்மதேவரால் தென் திசையில் படைக்கப்பட்ட பித்ரு லோகத்தில் வசிப்பதனால், தமிழ் கூறும் நல்லுலகம் அவர்களைத் "தென்புலத்தார்" என்று இனிய தமிழில் அழைக்கின்றது.

இந்நிலையில், நம்மால் போற்றிப் பூஜிக்கப்பட வேண்டியவர்களுள் பித்ருக்களே முதல் நிலையில் உள்ளனர் என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறுவதன் மூலம் பித்ரு பூஜையின் முக்கியத்துவத்தை நம்மால் உணர முடிகின்றது.

*"ஜீவதோர் வாக்ய கரணாத் ப்ரத்யப்தம் பூரி போஜனாத், கயாயாம் பிண்ட தானாஸ்ச்ச த்ரிபி: புத்ரஸ்ய புத்ரதா"* என்ற சமஸ்கிருதப் பொன்மொழியோ, "பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் பொழுது அவர்களின் சொற்படி நடப்பதும், இறந்த பிறகு அவர்களுடைய வருடாந்திர நினைவு நாளில் அனைவருக்கும் வயிறார உணவளிப்பதும், வடநாட்டில் உள்ள கயா க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்குள்ள அட்சய வடத்தின் கீழ் பிண்ட தானம் செய்வதும் ஆகிய மூன்று மட்டுமே ஒருவன் புதல்வனாகப் பிறந்ததன் பயனாகும்" என்று தெரிவிக்கின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, பெற்றோர்கள் உள்ளிட்ட பித்ருக்களுக்கும், பின்னவர்களுக்குமான பந்தம் என்பது காலங்களைக்கடந்து நிற்பது என்பதுடன் பித்ரு பூஜையின் பலனாகக் கிடைக்கின்ற நம் மூதாதையர்களின் ஆசிர்வாதத்தால் நாம் அனைத்து விதமான நன்மைகளையும் அடையலாம் என்பதையும் உணரலாம்.

புனிதமான இந்த புரட்டாசி மாதத்தில், மிக எளிமையான முறையில் நாம் அளிக்கின்ற எள், தண்ணீர் ஆகியவற்றினால் மனத்திருப்தி அடைந்து நம்மையும், நமது வாரிசுகளையும் ஆசிர்வதித்து நல்வாழ்வுக்கு வழிவகை செய்யும் நம்முடைய பித்ருக்களை இப்புரட்டாசி மாதம் வருகின்ற மஹாளய பக்ஷத்தில் (18–09–2024 முதல் 02–10–2024 வரை) வழிபட்டு பித்ருக்களின் அருளைப் பெறுவோம். அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமையிலிருந்து துவங்கும் திருவேங்கடவனின் பிரம்மோத்ஸவத்திலும் பங்கு கொண்டு இறையருளையும் பெறுவோமாக!

# வளமான வாழ்வை அருளும் வராஹப்பெருமான்

**கவிஞர்**
**திரு. கே.எஸ்.மணி**

**செஞ்சிக்கோட்டை,**
**97862 46031**

மகாவிஷ்ணு தனது வராஹ அவதாரத்தின் போதுதான் இரண்யகசிபுவின் சகோதரனான இரண்யாக்ஷன் தனது தவ வலிமையால், பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு கடலில் மூழ்கச் சென்று விட்டான். தேவர்களும், முனிவர்களும் வேண்டிக் கொள்ள திருமால் பன்றியாக (வராஹம்) உருவம் எடுத்து கடலினுள் புகுந்து அவ்வசுரனை அழித்து தன் இரு கோரைப் பற்களின் இடையே பூமியைச் சுமந்து கொண்டு மீட்டு வந்தார் என்கிறது வராஹ அவதார வரலாறு.

இதனை பூமிப்பிராட்டி ஆண்டாளாக அவதரித்த போது நன்றியுடன் நினைவு கூர்ந்து தனது பாசுரத்தில்

*பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்*
*மாசுடம்பில் நீர்வார மானமிலாப்பன்றியாம்*

என்று போற்றுகிறாள்.

இந்த அவதார காலத்தில்தான் பூமிப் பிராட்டிக்கும், அவள் மூலமாக உலகத்தோருக்கும் வாக்களிக்கிறார் எம்பெருமானான பரந்தாமன். “எந்த ஒரு மனிதன் மனமும், உடல்நிலையும் நன்றாக இருக்கும்போதே பிறப்பு, இறப்பு இல்லாதவனாகிய என்னை நினைக்கிறானோ, அவன் மரணம் அடையும் சமயத்தில் என்னை நினைக்க முடியாதவனாய் இருந்தாலும், அந்த சமயத்தில் எனது திருவடி நிலையான மோட்ச சாம்ராஜ்ய பலனை அவனுக்கு அளிக்கிறேன்” என்கிறார்.

பூமிப்பிராட்டி வராஹப் பெருமானிடம் உலகோர் அனைவரும் மிகவும் எளிதாக திருமாலை அடைய வழி சொல்ல வேண்டியபோது அளித்த வாக்குறுதி இது. பூமிப்பிராட்டியின் தாயுள்ளத்தையும், எம்பெருமானின் தயாள குணத்தையும் இதிலிருந்து அறியலாம். வாக்குறுதி அதைக் காப்பாற்றுவது என்பதை நோக்கும் போது வராஹப் பெருமானின் வாக்குறுதியே மேலானது என்று பராசர பட்டர் அருளிச் செய்துள்ளார்.

நாம சங்கீர்த்தனத்தால் தன்னைப்பாடி உகப்பித்த நம்பாடுவான், கைசிகம் என்ற பண்ணினைக் கொடுத்த சரிதையை வராஹப் பெருமான் பூமிப் பிராட்டிக்கு கூறும்போது சோம சர்மா என்ற அந்தணனுக்கு சாப விமோசனம் ஏற்பட்ட சரிதையாக கூறி நாம சங்கீர்த்தனத்தின் மேன்மையை நன்கு விளக்கினார்.

இதனை கோதைப் பிராட்டியும் *“தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார் பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே”* என்று நாச்சியார்



திருமொழியில் குறிப்பிட்டு உள்ளார். இப்படிப்பட்ட வராஹப் பெருமான் பூமிப் பிராட்டிக்கு மட்டுமே அல்லாமல், ஆழ்வார்கள் அனைவருக்குமே ஞானத்தை அருளியவன். நம்மாழ்வார் *''ஏனத் துருவாய் இடந்த பிரான்... ஞானப் பிரானையல்லால், இல்லை நான் கண்ட நல்லவே''* என்று வராஹப் பெருமானை ஞானப்பிரான் என்றே போற்றுகிறார்.

திருமங்கையாழ்வார் ''பன்றியாய் அன்று பாரகம் கீண்ட பாழியான் ஆழியான் அருளே நன்று நானுய்யக் கண்டு கொண்டேன்'' என்று வராஹப் பெருமான் அருளால் தான் ஞானம் பெற்றதாய்க் கூறுகிறார். பெரியாழ்வாரும் *''எயிற்றிடை மண் கொண்ட எந்தை இராப்பகல் ஓதுவித்து என்னைப் பயிற்றிப் பணி செய்யக் கொண்டான்''* என்கிறார். வராஹப் பெருமானை வணங்குபவர் அவரின் திருமேனியைத் தரிசிக்கப் பெறுவர். பூதத்தாழ்வார் மேலும் தொடர்கையில் ஞானப்பிரான் அருளால் அவனைக் கண்டு ஞானத்தமிழ் அருளிச் செய்தவர். *''யானே இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன் பெருந்தமிழன் நல்லேன் பெரிது''* சிறந்த தமிழ் மொழியில் சொல் மாலைகள் விண்ணபித்து பெரிய தமிழ்க் கலையில் வல்லவனாய் உனக்கும் மிகவும் நல்லவனாய் இருப்பவன் அடியேன் ஒருவனே! என்று கூறிக் கொள்கிறார்.

"ஞானப் பிரானை தம் நெஞ்சில் கொண்ட கடல் மல்லையில் அவதரித்த பூதத்தாழ்வாரே நம் தலைவர்" என்று போற்றுகிறார் திருமங்கை ஆழ்வார்.

வராஹப் பெருமானுக்கு நாடெங்கிலும் பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் ஸ்ரீமுஷ்ணம், தஞ்சாவூர் மாமலைக் கோயில்,





- போலியோ மெல்லிடஸ், பெருமூளை வாதம், பிறவிக் கோளாறுகள், முதுகுத்தண்டு காயங்கள் மற்றும் எலும்பு சம்மந்தமான மூட்டு சிதைவு நோயாளிகளுக்கு முழுமையான இலவசமாக சேவைகளை வழங்குவதற்காக அதிநவீன மருத்துவ உபகரணங்களுடன் பர்ட் மருத்துவமனை நிறுவப்பட்டது.
- மக்கள் சேவையே மாதவ சேவை என்பதை கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு மனிதாபிமான கண்ணோட்டத்துடன் இம்மருத்துவ மனைக்கு உங்கள் பங்களிப்பினை நன்கொடையாக வழங்கிடுங்கள்.
- நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80(ஜி) ன்படி வரி விலக்கும் உண்டு.

காசோலை/ வரைவோலையை "செயலாட்சித் தலைவர், தி.தி.தே." எனும் பெயரில் எடுத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உதவி செயலாட்சித் தலைவர்
(நன்கொடைப் பிரிவு),
ஒருங்கிணைந்த நன்கொடையாளர் நிர்வாக மையம்,
ஆதிசேஷ ஓய்வு இல்லம்,
கூடுதல் செயலாட்சித் தலைவர் முகாம் அலுவலகம் அருகில்,
திருமலை,
தொ.எண் : 0877-2263472.

இயக்குனர், பர்ட் அறக்கட்டளை,
தி.தி.தே. திருப்பதி – 517 501.
தொ.எண். 0877-2264025, 2264619.

இணையதளம் : www.tirumala.org
மின்னஞ்சல் : officebirrd@gmail.com
மொபைல் செயலி : BIRRD HOSPITAL



# ஆதிவராஹத்தலம்

மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ஒன்றான வராஹப் பெருமானுக்கு திருமலையில் ஸ்வாமி புஷ்கரணியின் வடமேற்குக் கரையில் ஆலயம் அமைந்து உள்ளது.

ஸ்வாமி ஸ்ரீவைகுந்தத்தை விட்டு, மஹா லக்ஷ்மியைத் தேடி, பூலோகத்திற்கு வந்த போது, ஸ்ரீவராஹரிடம் கலியுகத்தில் இந்தத் திருத்தலத்தில் நின்று தன் பக்தர்கள் வேண்டும் வரங்களை அளித்திட தனக்கு ஒரு தலம் வேண்டும் என வேண்ட, வராஹரும் திருமலையில் இடமளித்தார். அன்று முதல் வராஹ ஸ்வாமிக்கே இத்திருத்தலத்தில் முதல் மரியாதை (முதல் மணி, முதல் நைவேத்தியம்) எல்லாம் நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் வராஹருக்கு வைகானச ஆகமப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. வராஹ ஸ்வாமியைத் தரிசித்தால் மட்டுமே திருமலை யாத்திரை முழுமை பெறும் என்பது நம்பிக்கை. வடக்கு மாடவீதியில் இந்த ஆலயத்திற்கான நுழைவாயில் அமைந்துள்ளது.

திருவிடந்தை, திருக்கடல் மல்லை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருவேங்கடம், திருக்குறுங்குடி போன்ற தலங்களால் இந்தப் பெருமையை உணரலாம்.

ஆதிவராஹப் பெருமானைத் தரிசித்தால் கல்வி, ஞானம் சித்திக்கும். பூமி சம்பந்தமான வழக்குகளில் வெற்றி கிட்டும், சர்ப்ப தோஷங்கள் விலகி, தடைபட்ட திருமணங்கள் விரைவில் நடைபெறும். நன்மக்கட்பேறு அமையும்.

# பக்தர்கட்கு பக்தனின் வேண்டுகோள்



*கண்ணன் கருணைப் பெற*
*கனிந்திடு - மணி*
*வண்ணன் வரம் பெற*
*பணிந்திடு - மண்*
*திண்ணன் திறம்பெற*
*நினைந்திடு - உன்*
*எண்ணம் எழில்பெற*
*இணைந்திடு*

*எழில் மிகுந்த ஏந்தலை நீ ஏந்திடு - அவன்*
*குயில் ஓசையாலே செவி சாய்ந்திடு - பாஞ்சாலிக்கு*
*துகில் கொடுத்த துவாரகனைத் தோய்ந்திடு*
*அகில் வாசனை மேனியனை ஆய்ந்திடு*

*திகில் அடைந்த துரோபதைக்கு துகிலவன் - பாரில்*
*முகில் நிறமுடையோனே முதலானவன்*
*பகை குணமுடையோர்கள் பயம் கொள்வர்*
*வகைக்கொரு உருவெடுக்கும் வள்ளல் வண்ணனே வாழ்க!*

*கண்ணா கண்ணாவென கதறினால் - உனக்கு*
*என்ன என்னவெனப் பதருவாய் - துவாரகா*
*மன்னா மன்னா என மண்டியிட்டால் - எனக்கு*
*இன்னா இன்னாயில்லாமல் செய்திடுவாய்.*

*கிருஷ்ணா கிருஷ்ணாவென அலறினால் - எனக்கு*
*நஷ்டம் இல்லா வாழ்வை வழங்குவாய் - எனக்கு*
*நஷ்டத்தை நல்கிடும் நயவஞ்சரை - அந்த*
*துஷ்டரை துரத்தி அழித்திடுவாய்*

*மச்சாவதாரனை நாடலானேன் - அவன்*
*நச்சரவன் மீது ஆடலானான்*
*கூர்மாவதாரனை கூடலானேன் - அவன்*
*கோவர்த்தனகிரியைக் குடையாய்க் கொண்டான்*

*நாராயணனை நாடலானேன் - அவன்*
*நாரண நாரதர் கீதம் கேட்டேன்*
*புருஷோத்தமன் புகழையே புகழ்ந்துரைக்க - நான்*
*புரட்டாசித் திங்களில் விரதம் ஏற்றேன்.*

**- விஷ்ணு பக்தன், ராகசுதாசன், வல்லம்.**


# வாமனரை வரவேற்கும் பூக்களம்

– முனைவர் பா. காயத்ரி,
சென்னை.

கேரள மாநிலத்தில் இந்துக்களின் முக்கிய மான பண்டிகைகளுள் ஒன்று "ஓணம்". பத்து நாட்கள் மிக விமரிசையாகக் கொண்டாடப்படும் இந்த பண்டிகையின் இன்றியமையாத ஒரு பகுதி "பூக்களம்" (பூக்கோலம்). பூக்களால் தீட்டப்படும் வண்ண மயமான படம் என்பது பொருள். இதனை ஓணப்பூக்களம், அத்திப்பூக்களம் என்றும் அழைப்பர். இப்பூக்கோலம் வீட்டின் வாசலில் இட்டு தெய்வங்களுக்கு நல்வரவைத் தெரிவித்து வீட்டில் சுபீக்ஷமும், சௌபாக்கியமும் நிறைய வைக்கும் ஒரு வழிபாடாகக் கருதப்படுகிறது.

## ஓணம் பண்டிகை – புராண வரலாறு

ஓணம் பண்டிகை பகவானின் ஐந்தாவது அவதா ரமான "வாமன" அவதாரத்துடன் தொடர்புடையதாகும். அதாவது, பிரகலாத னின் பேரனான மகாபலி, சிறந்த விஷ்ணு பக்தனாகவும், நீதி வழுவாமல் ஆட்சி புரியும் அரசனாகவும் திகழ்ந்தான். மூவுலகங்களை யும் தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தான்.



தேவலோகம் இழந்த நிலையில் இந்திராதி தேவர்கள் பகவானிடம் முறையிட பகவான், அவன் அசுரனா னாலும், தன் பக்தன். அவனை கொல்ல முடியாது என்றும், அதே சமயம் அவனின் மனதில் அகந்தை வளர்வதையுணர்ந்து, அதனை அடக்க மனம் கொண் டார். அதிதி மற்றும் கஷ்யபரின் புதல்வனாக உபேந்திரன் என்ற திருநாமத்து டன் வளர்ந்தார். உருவத்தில் குள்ளமாக இருந்ததால் வாமனன் என்ற புனைப் பெயரையும் பெற்றார்.

ஒரு முறை மகாபலி யாகம் செய்து கொண்டு இருந்த போது, வாமனன் அங்கு போய் மூவடி நிலத்தை வேண்ட, வாமனனின் தேஜஸ் மற்றும் அழகில் மயங்கிய ராஜா பலி வாக்கு கொடுக்க, வாமனன் திருவிக்ரமராக வளர்ந்து ஓரடியால் பூமியை அளந்து, இரண்டாவதடியால் சுவர்க்கத்தை அளந்து, மூன்றாவது அடியை "எங்கு வைப்பது?" என்று ராஜாவிடம் கேட்க, மகாபலி தன் அகந்தையை விடுத்து சிரத்தில் வைக்குமாறு தலைதாழ்ந்து நின்று கொடுத்தார். வாமனனும் மகாபலியைப் பாதாளத்தில் இறக்கிவிட, பக்தனின் பணிவால் அக மகிழ்ந்த ஸ்ரீமந்நாராயணன் ஏதேனும் ஒரு வரம் கேட்கும்படி மகாபலியிடம் கூறினார். அவ்வரசனும் தன் மக்கள் மீது வைத்திருந்த அபரிமிதமான அன்பினால் வருடத்திற்கு ஒரு முறை பூலோகத்தில் தன் ராஜ்ஜிய மக்களை பார்க்க வேண்டிட, ஸ்ரீஹரியும் "அப்படியே ஆகட்டும்!" என்று வரமருளினார்.

மகாபலியின் ராஜ்ஜியமே, இன்றைய கேரளா. விஷ்ணு பக்தனான மகாபலியை வரவேற்று உபசரிக்கும்படி இந்த ஓணம் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். ஆணவம், அகந்தை தலைவிரித்து ஆடும்போது அதனை பகவான் அடக்க வருவாரென்றும், பணிவினால் மட்டுமே பகவானை அகமகிழ வைக்க முடியும் என்னும் தத்துவத்தையும், பக்தியால் பகவான் மூவுலகை யும் ஒருவனுக்கு அருளினாலும், மூவடியால் அவ்வனைத்தையும் திருப்பி எடுக்கும் அதிகாரமும் பகவானுக்கு உண்டு என்பதையும் இந்த

ஓணம் பண்டிகை நமக்கு உணர்த்துகின்றது. கேரளத்தில் ஓணம் அறுவடை பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது.

திருவோணம் நட்சத்திரத்தின் பெயரைத் தொடர்ந்தே "ஓணம்" என்கிற பெயர் இப்பண்டிகைக்கு வந்தது. இப்பண்டிகை மலையாள முதல் மாதமான சிங்கம் (ஸ்ராவண மாதம்) மாதத்தில் அத்தம் நட்சத்திர நாளில் தொடங்கி 10 நாட்களுக்கு மிக விமரிசையாகக் கொண்டாடுவர். அப்பத்து நாட்களின் பெயர்களாவன: அத்தம், சித்திரா, சோதி, விஷாகம், அனிழம், த்ரிகெட்டு, மூலம், பூராடம், உத்ராடம் மற்றும் திருவோணம் ஆகும். ஒவ்வொரு நாளும் அந்தந்த நட்சத்திரத்தை வைத்து குறிப்பிடப் படுகிறது.

ஓணம் பல சிறப்பம்சங்களைத் தன்னுள் அடக்கிய ஒரு விழாவாகும். இந்த விழாவின் முதன்மையாக சில அம்சங்கள் என்று கூறினால் பூக்களம் எனும் பூக்கோலம், வல்லம் களி என்னும் படகு போட்டி, புலிக்களி , ஓணம் களி மற்றும் தும்பித்துள்ளல் போன்ற நடனங்கள், அத்தச்சாமயம் போன்ற கிராமீய ஆடல் மற்றும் பாடல், ஓணம் விளையாட்டுகள், ஊஞ்சல் ஆடுதல், ஸத்யா எனும் விருந்து முதலியன.

மேற்கூறியவற்றுள் பூக்களம் இப்பண்டிகையின் மிக முக்கியமான மற்றும் பாரம்பரியமான ஒரு பகுதி என்று கூறினால் அது மிகையாகாது. கேரளத்தில் அனைத்து இந்துக்கள் வீட்டின் வாசலில் ஓணப் பண்டிகையின் பத்து நாட்களும் வண்ணமயமான, கண்களைக் கவரும் வண்ணம் இப்பூக்கோலங்கள் வீட்டை அலங்கரிப்பதைப் பார்க்கலாம். இப்பூக் கோலம் மஹாராஜா பலியை வரவேற்கும் விதமாகவும் கருதப்படுகிறது.

பொதுவாக, பூக்கோலம் பத்து வட்டங்களை உடையது. அவ்வட்டங்கள் ஒன்றுக்குள் ஒன்றாக

## ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், தொண்டைமான் புரம்







**ஆகாசராஜனின் தம்பியான தொண்டைமான் சக்கரவர்த்தி தொண்டமநாடு மண்டலத்தில் பல ஆலயங்களைக் கட்டி உள்ளார். இவர் தினமும் திருமலைக்குச் சென்று திருவேங்கட முடையானைத் தரிசித்து விட்டு வருவார். தொண்டைமானுக்கு வயதான பிறகு தினமும் திருமலைக்குச் சென்று இறைவனை வழிபட முடியாமல் போயிற்று. இதனால் தினமும் தன் வீட்டிற்கே வந்து தனது பூஜைகளை ஏற்குமாறு இறைவனிடம் வேண்டி னார். தொண்டைமானின் வேண்டுகோளின்படி திருவேங்கட முடையானும் ஸ்ரீதேவி பூதேவியுடன் தொண்டைமான் வீட்டிலேயே எழுந்தருளினார். திருமலையில் உள்ள ஆனந்த நிலையத்தைக் கட்டியதும் தொண்டைமான் தான்.**

**ஆகையினாலேதான் தொண்டைமான்புரத்திலும் தொண்டை மான் தன் வீட்டினருகே நிர்மாணித்த கோயிலின் கோபுரமும் ஆனந்த நிலையத்தைப் போன்றே நிர்மாணித்தார். ஸ்வாமியும் இங்கு அபய திருக்கரங்களுடன் ஸ்ரீதேவி பூதேவியுடன் தரிசனம் அளிக்கின்றார். இத்திருக்கோயில் திருப்பதியிலிருந்து (32 கி.மீ.) காளஹஸ்தி (8 கி.மீ.) செல்லும் பாதையில் அமைந்துள்ளது.**

இருக்கும். அதாவது பண்டிகையின் முதல் நாள் பூக்கள் நிறைந்த ஒரு வட்டம் இடப்படும். இரண்டாவது நாள் முதல் வட்டத்தைச் சுற்றி இரண்டாவது வட்டம் இடப்படும். அங்ஙனம் இப்பூக்களத்தின் ஒவ்வொரு வட்டமும் ஒவ்வொரு தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. அதாவது முதல் வட்டம் – கணபதிக்கு, இரண்டாம் வட்டம் – சிவ சக்திக்கு, மூன்றாம் வட்டம் – சிவபெருமானுக்கு, நான்காம் வட்டம் – நான்முகனுக்கு, ஐந்தாம் வட்டம் – பஞ்ச பூதங்களுக்கு, ஆறாம் வட்டம் – சண்முகனுக்கு, ஏழாம் வட்டம் – குரு பகவானுக்கு, எட்டாம் வட்டம் – அஷ்ட திக்பாலகர்களுக்கு, ஒன்பதாம் வட்டம் – இந்திர தேவனுக்கு, பத்தாம் வட்டம் – மஹாவிஷ்ணுவிற்கு என்று கூறுவர்.

இன்றைய காலகட்டத்தில் பல விதமான பூக்கள் கிடைப்பதால் அவற்றால் பூக்கோலம் அலங்கரிக்கப்படுகிறது. ஆனால் பண்டைய காலத்தில் அப்பருவத்தில் இல்லந்தோறும் மலரும் பூக்களை வைத்துதான் பூக்களம் இடப்பட்டது. அதுவும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதமான பூக்களால் பூக்களம் நிரப்பப்படும். முதல் நாள் ஒரு வகையான பூக்கள். இரண்டாவது நாள் இரண்டு வகையான பூக்கள். அங்ஙனே பத்தாவது நாளில் பத்து விதமான பூக்ககளால் பூக்கோலம் இடப்படும். முடிதும்பைப்பூ, வெட்சி பூ, செம்பருத்தி, சங்குபூ, சாமந்தி, மந்தாரை, கொன்றைப்பூ, மூக்குத்தி பூ முதலியவை பண்டைய காலத்தில் பூக்களம் இடுவதற்கு பயன்படுத்தப்பட்ட சில முக்கியப் பூ வகைகளாகும்.

சிலர் பூக்களம் தேவ–அசுர யுத்தத்தைக் குறிப்பதாகவும் கூறுவதுண்டு. பூக்கோலம் அதிகாலையில் எழுந்து, ஸ்நானம் செய்து, அன்றைய தினம் செடிகளில் மலர்ந்த மலர்களைப் பறித்து, வீட்டு வாசலில் பசுஞ்சாணம் தெளித்து, பின்னர் அகப் புறத் தூய்மையுடன் அவ்விடத்தில் அந்த வீட்டுப் பெண் பிள்ளைகள் பூக்கோலமிடுவர். சில வீடுகளில் இப்பூக்கோலத்தின் மீது தோரணம் கட்டுவர். வேறு சிலர் சந்தியா நேரத்தில் இப்பூக்களத்தின் நடுவில் அல்லது அதனைச் சுற்றி விளக்குகளும் ஏற்றுவது உண்டு. மேலும் முக்கோண வடிவமுள்ள சிறிய கோபுரங்களை இப்பூக்களத்தின் நடுவிலோ அல்லது சில ப்ரத்யேக மூலைகளிலோ வைப்பர். இம்முக்கோண வடிவங்கள் பலி மற்றும் வாமன அவதாரத்தைக் குறிப்பதாகவும் கூறுவர்.

எனவே, நாமும் இவ்வோணம் பண்டிகையின் பூக்களத்திலுள்ள மலர்களைப் போல என்றும் மலர்ந்த முகத்துடனும், அவை வீசும் நறுமணத்தைப் போன்று அனைவரிடத்திலும் மகிழ்ச்சியைப் பரப்பி, அப்பூக்களத்தைப் பார்க்கும்போது கிடைக்கும் மன திருப்தியும், வாமன அவதாரம் உபதேசிக்கும் அடக்கமும், கோவிந்தனின் அருளால் அனைவரும் பெறுவோம். அவன் அடி போற்றுவோம்.



### திருமலை மலைப்பாதையில்...

- வாழ்க்கை விலைமதிக்கமுடியாதது. எனவே சாலை விதிமுறைகளைக் கடைபிடியுங்கள்.
- வாகனத்தை கவனமுடன் நடத்துங்கள். சேரவேண்டிய இடத்தை எளிதில் அடையுங்கள்.
- மலைப்பாதையில் திருப்பதியில் இருந்து திருமலைக்குப் பயண நேரம் 28 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் திருமலையில் இருந்து திருப்பதிக்குப் பயண நேரம் 40 நிமிடங்கள்.
- மலைப்பாதையில் உங்களுக்கு முன்பாகச் செல்லும் வாகனத்தை முந்தாதீர்கள்.
- மலைப்பாதையில் வாகனத்தின் இன்ஜினை நிறுத்தி நியுட்ரலில் செல்லாதீர்கள்.
- மலைப்பாதையில் கைபேசியில் உரையாடிக் கொண்டே வாகனத்தை ஓட்டாதீர்கள்.

# சங்க இலக்கியங்களில் பலராமர்

திருமால் தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காக்க எடுத்த தசாவதாரங்களில் எட்டாவது அவதாரம் பலராமர் அவதாரம். திருமாலைப் பிரியாத ஆதிசேஷனே பலராமனாகப் பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. திருமாலின் அவதாரங்களில் வெண்ணிறத் தோற்றம் கொண்டவராகவும், கலப்பையை ஆயுதமாகவும், பனைக்கொடியினை உடையவராகவும் பலராமர் காணப்படுகின்றார். தேவகி வசுதேவருக்குப் பிறக்கும் குழந்தையால் தனக்கு அழிவு வரும் என்று அசரீரி கூறியதைக் கேட்ட கம்சன் அச்சமுற்று தேவகியையும் வசுதேவரையும் சிறையில் அடைக்கிறான். சிறையில் பிறந்த ஆறு குழந்தைகளையும் கம்சன் கொல்கிறான். ஏழாவது முறையாக கருவுற்ற தேவகியின் கருவை வசுதேவரின் முதல் மனைவியான ரோகிணியின் கர்ப்பத்திற்கு மாற்றம் செய்யுமாறு திருமால் யோகமாயையிடம் ஆணையிடுகிறார்.

யோகமாயையும் அவ்வாறு செய்து முடித்தாள். ரோகிணி கருவுற்ற செய்தி அறிந்தால் அவளையும் கம்சன் அழித்து விடுவான் என்றெண்ணி அவளை மதுராவை விட்டு வெளியேற்றி நந்த கோபரின் பாதுகாவலில் இருக்கச் செய்கின்றார். அங்கு ரோகிணிக்கு பிறந்த குழந்தைக்கு முனிவர் கர்காச்சாரியார் இராமன் என்று பெயர் சூட்டினார். பின்னாளில் மிகுந்த பலத்துடன் காணப்பட்டதால் பலராமர் என்று அழைக்கப்பட்டார். இவருக்கு சங்கர்ஷணன், பலதேவன், அலபத்ரன், கதாயுதன் என்று பல பெயர்கள் உண்டு. அவ்வாறே அலாயுதன், அச்சுதன், நீலாம்பரன், குண்டலன், முன்னோன், வெள்ளை, வெள்ளையன், பனந்துசன், அலகதேவன் என பலப்பல பெயர்களை பிங்கலந்தை நிகண்டும் குறிப்பிடுகின்றது. இவருக்குப் பின் பிறந்த கிருஷ்ணனுடன் அவர் ஆயர்பாடியில் வளர்ந்து வந்தார். வேத நூல்களில் பலராமனின் வலிமை ஆன்மீக வலிமையாக மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, பலராமர் எப்போதும் முடிவில்லாத வலிமையைக் கொண்டிருப்பார் என்று நம்பப்படுகிறது. பீமரும், துரியோதனனும் பலராமனின் சீடர்களாக இருந்தனர்.

*மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்*
*வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி*

– நற்றிணை – 32

மாயோனைப் போல் கருநிறம் கொண்டு ஓங்கி உயர்ந்து நிற்கும் மலையின் ஒரு பக்கத்தில் மாயோனின் முன்னவ னாகத் தோன்றிய பலராமன் என்னும் வாலியோனின் நிறம் போல் வெள்ளை நிறம் கொண்ட அழகிய அருவி இருக்கிறது என்றும்,



**– முனைவர்**
**பிரியா கிருஷ்ணன்,**
**சென்னை,**
**7299587879**

*ஒரு குழை ஒருவன்போல் இணர்சேர்ந்த*
*மராஅமும்*
– கலி:26:1

ஒரு காதணிகொண்டவனும், வெள்ளை நிறத்தவனுமாகிய பலராமனைக் குறித்தது என்றும்,

*கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து*
*நெடுமிசைச் சூழும் மயிலாலும்* – கலி: 36:1–2

நாஞ்சில் படையைக் கொண்ட இப்பலராமன் துளசி மாலை அணிந்துள்ள தோற்றத்தை வைத்து, "கொடிய வலிமையுடைய நாஞ்சிற்படையைக் கொண்ட பலராமன் மார்பில் பசிய துளசி மாலை சூழ்ந்திருப்பது போன்று மராமரத்தின் மார்பு போன்ற உயர்ந்த கிளைப்பகுதிகளில் பசியமயில்கள் சூழ்ந்திருக்கும்" என்றும் பலவாறு சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

*ஒரு குழை யவன்மார்பில் ஒண்தார் போல் ஒளிமிகப்*
*பொருவறப் பொருந்திய செம்மரு வெள்ளையும்*
– கலி:105:11–12

*ஞாலமூன்று அடித்தாய முதல்வற்கு முதுமுறைப்*
*பாலன்ன மேனியான் அணிபெறத் தைஇய*
*நீலநீர் உடைபோல தகைபெற்ற வெண்திரை*
– கலி:124:1–3

*கடல்வளர் புரிவளை புரையும் மேனி*
*அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்*
*மண்ணுறு திருமணி புரையும் மேனி*
*விண் உயர் புட்கொடி விறல் வெய்யோனும்*
– புறம்.56:3–6

*வாலியொத் தீயே வாலி யோனை* – புறம்:56:15




*பால்நிற உருவின் பனைக் கொடியோனும்*
*நீல்நிற உருவின் நேமியோனும் என்று*
*இருபெருந் தெய்வமும் உடன் நின்றா அங்கு*
– புறம், 58:14–16

*மை இல் வால் வளை மேனிச்*
*சேய் உயர் பணைமிசை எழில் வேழம் ஏந்திய,*
*வாய் வாங்கும் வளை நாஞ்சில், ஒரு குழை*
*ஒருவனை*
– பரி: 1:3–5

*ஒள் ஒளியவை, ஒரு குழையவை*
– பரி.15:55

*திறன் இகந்து வரூஉம் அவர் உயிர் அகற்றும்*
*விறல் மிகு வலி ஒலி பொலிபு அகழ் புழுதியின்*
*நிறன் உழும் வளை வாய் நாஞ்சிலோனும்*
– பரி:13:31–33

என்று பலராமன் அவதாரத்தை சங்கப்பாடல்கள் பல இடங்களில் பதிவு செய்திருக்கின்றது. சங்க காலத்தில் பலராமருக்கென்று கோயில்கள் இருந்ததையும் அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் பூம்புகாரில் உள்ள கோயில்களைப் பட்டியலிடும்போது சிவன் கோயில் முதலாவதாகவும், முருகன் கோயில் இரண்டாவதாகவும், பலராம் கோயில் மூன்றாவதாகவும் இருந்ததாகக் குறிப்பிடுவார். மதுரையில் பலராமனுக்கு கோயில் இருந்ததை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

ஆலுவ ஸ்ரீகிருஷ்ண பலராம கோயில், கேரளா – நென்மினி பலராம கோயில், கேரளா – மஜூர் பலராம கோயில், பூரி ஜெகன்நாதர் கோயில், பாலதேவ்ஜு கோயில், அனந்த வாசுதேவா கோயில், ரெவ்டி பால தேவிஜி ஆலயம், ஜெடல்பூர், குஜராத், ஸ்ரீதௌஜி ஆலயம், வில்–பஞ்சாரி, ஹரியானா, ஸ்ரீதௌஜி ஆலயம், மைனிபுரி(உ.பி.) ஸ்ரீஸ்ரீ பாலாதேவ் ஜியு, கோபால் ஜியு கோயில், பெலிகட்டா, கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தமிழகத்தில் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயிலிலும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலிலும் பலராமன் சிற்பம் உள்ளது. அதேபோல் மாமல்லபுரம் கிருஷ்ண மண்டபத்தில் கண்ணன் கோவர்த்தன கிரியைக் கையில் ஏந்தி குடையாய்ப் பிடித்திருக்கும் சிற்பங்களில் பலராமன் சிற்பமும் இடம் பெற்று உள்ளது.

திங்கள்தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்



# திருமலையப்பனுக்கு மங்களாசாசனம்...

வேங்கடம் கலியுக வைகுண்டம், வேங்கடவன் அருளும் திருமலையில் ஆண்டுக்கொருமுறை நவராத்திரி பிரம்மோத்ஸவம் நடைபெறும். அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் பிரம்மோத்ஸவம் காண்பதற்கு கண்கள் ஆயிரம் வேண்டும். திருவோணத் திருவிழா என்று இந்த உற்சவத்திற்குப் பெயர். 27 நட்சத்திரங்களில் 'திரு' என்ற அடைமொழியோடு உள்ள நடசத்திரங்கள் இரண்டு. ஒன்று திருவோணம். இன்னொன்று திருவாதிரை.

வைணவத்தில் இரண்டுமே ஏற்றம் பெற்ற நட்சத்திரங்கள். திருவோணம் எம்பெருமானின் நட்சத்திரம். திருவாதிரை எம்பெருமானாரின் நட்சத்திரம். இந்த ஆண்டு திருவோணத் திருவிழா (திருமலை பிரம்மோத்ஸவம்) அக்டோபர் மாதம் நான்காம் தேதி வெள்ளிக்கிழமை துவங்கி, அக்டோபர் மாதம் 12 ஆம் தேதி சனிக்கிழமை வரை நடைபெறுகிறது.

இந்த பிரம்மோத்ஸவப் பெருவிழாவினைக் காண்பதற்கு உலகம் முழுவதும் இருந்து திருமலையில் வந்து மக்கள் கூடுவார்கள். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் வாகனசேவை நடைபெறும். அதிலும் குறிப்பாக அக்டோபர் மாதம் எட்டாம் தேதி நடைபெறும் கருட வாகன சேவை மிக அற்புதமாக இருக்கும். அதைத்தான் ***''சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்''*** என்னும் திருமொழியில் பெரியாழ்வார், ***''பறவை ஏறும் பரம்புருடா! நீ என்னை கைகொண்ட பின் பிறவி என்னும் கடலும்***









– பேராசிரியர்
எஸ். கோகுலாச்சாரி
புவனகிரி
94434 39963.



*வற்றி பெரும் பதம் ஆகின்றதால்''* என்று மங்களா சாசனம் செய்திருக்கின்றார். இந்த பிரம்மோத்ஸவ நிகழ்ச்சியையும், திருமலை அப்பனையும் பாடாதவர்கள் கிடையாது.

இந்த பிரம்மோத்ஸவத்தில் எப்படி எந்த உணர்வோடு கலந்து கொள்ள வேண்டும் என்பதை திருமங்கை ஆழ்வார் அற்புதமான பாசுரத்தில் சொல்லுகின்றார்.



*பாருநீரெரிகாற்றி னொடு ஆகாசமிவையாயினான்*
*பேருமாயிரம் பேசநின்ற பிறப்பிலிபெருகுமிடம்*
*காரும்வார்ப்பனிநீள்விசும்பிடைச்*
*சோருமாமுகில் தோய்தர,*
*சேரும் வார்ப்பொழில்சூழ் எழில்*
*திருவேங்கடமடை நெஞ்சமே.*

திருமலையில் நாம் இருப்போம். பெருமாள் எதிரே வாகன சேவையில் காட்சி தந்து கொண்டிருப்பார். எண்ணற்ற மக்களைப் பார்த்து கொண்டு இருப்போம். ஆனால் நமது நெஞ்சு வேறு ஏதோ சிந்தனையில் இருக்கும். அப்படி இருக்கக் கூடாது என்கிறார் திருமங்கை ஆழ்வார்.



அதனால்தான் தன் நெஞ்சுக்கு அவர் ஒரு அறிவுரை கூறுகின்றார்.

“இதோ பார், இந்தத் திருமலை எப்படிப் பட்ட திருத்தலம் தெரியுமா? ஆகாசத்தில் நின்றும் மழை பெய்யவும், பனி பெய்யவும் பெற்ற திருத்தலம். மேகங்கள் வந்து படியும் படியான ஓங்கின சிகரம் உள்ள தலம். சோலைகளாலே சூழப்பட்ட தலம். எம்பெருமானே வந்து நமக்காக எழுந்தருளி உள்ள திருமலைக்கு ஸ்தூல சரீரத்தோடு நான் வந்து சேர்ந்து விட்டேன். ஆனால் நெஞ்சே, நீ எங்கே இருக்கிறாய்? நீ இன்னும் இங்கு வந்து அடையவில்லையே'' என்று பாடுகின்றார்.



நமக்காகவே எழுந்தருளி இருக்கின்றவன் திருமலை அப்பன். நமக்காகவே நடக்கின்ற உற்சவம் பிரம்மோத்ஸவம்.

திருவோணம் நட்சத்திரத்திற்கு இன்னொரு சிறப்பு இருக்கிறது. பத்து அவதாரங்களில் அர்ச்சாவதாரமாக திருமலையப்பன் எழுந்தருளி உள்ள சிறப்பு ஒரு பக்கம் இருந்தாலும் வாமன அவதாரம் நிகழ்ந்தது திருவோணத்தில் அல்லவா?

அந்த வாமனன் தானே திருமலை அப்பன். திருமலை அப்பனையும், அவனுடைய பிரம்மோத்ஸவத்தையும் நினைக்கின்ற பொழுது வாமனன் நினைவு வராமல் போகுமா?

திருமலை அப்பனையும் வாமன அவதாரத்தையும் இணைத்துப் பாடிய திருமங்கை ஆழ்வாரின் பாசுரத்தை இந்த பிரம்மோத்ஸவ சமயத்திலே நாம் காண்போம்.

முதலில் பாசுரம்.

*வண்கையான வுணர்க்கு நாயகன் வேள்வியில்*
*சென்றுமாணியாய்,*
*மண்கையா லிரந்தான் மராமரமேழு மெய்தவலத்தினான்*
*எண்கையா னிமயத்துள்ளான்*





இருஞ்சோலை மேவியவெம்பிரான்
திண்கைம்மா துயர்தீர்த்தவன்
திருவேங்கடமடை நெஞ்சமே.

இனி பொருள்.

வண் கையான் – விசேஷமாக தானஞ்செய்கிற கையையுடையவனாய், அவுணர்க்கு நாயகன் – அசுரர்கட்குத் தலைவனான மாவலியினது, வேள்வியில் – யாக பூமியிலே, மாணி ஆய் சென்று – பிரமசாரி வேஷத்துடன் எழுந்தருளி, கையால் – தனது திருக்கையாலே, மண் இரந்தான் – பூமியை யாசித்தவனும், மராமரம் ஏழும் – ஏழு மராமரங்களையும், எய்த – துளைத்த, வலத்தினான் – வலிமையுடையவனும், எண் கையான் – எட்டு திருக்கரங்களை உடையவனும், இமயத்து உள்ளான் – இமய மலையின் கண் (திருபிரிதியிலே) எழுந்தருளி இருப்பவனும், இரு சோலை – திருமாலிருஞ்சோலையிலே; மேவிய – பொருந்திய; எம்பிரான் – ஸ்வாமியும், திண் கை மா – திடமான துதிக்கையையுடைய கஜேந்திரனது, துயர் – துன்பத்தை; தீர்த்தவன் – போக்கியவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருவேங்கடம் நெஞ்சமே! அடை – வேண்டினார்க்கு வேண்டின படியே தானஞ்செய்கிற அசுர சக்கரவர்த்தியான மஹா பலியினுடைய யாக பூமியிலே வாமனப் பிரமசாரியாய் போனான். கை நீட்டி மூவடி மண் தாவென்று இரந்தான்.



சுக்ரீவனுக்கு நம்பிக்கை உண்டாவதற்காக ஏழு பெரிய மரங்களை பாணத்தால் துளைத்தான். பக்தர்களை காக்கும் அடையாளமாக திவ்ய ஆயுதங்களைத் தரிப்பதற்கான பல திருக்கரங்களை உடையவனாய் இருக்கிறான்.



அவன் கச்சிமாநகரிலுள்ள அஷ்டபுஜகரம் என்கிற திவ்ய தேசத்திலே அஷ்டபுஜனாக சேவை சாதிக்கிறான். இமய மலையில் திருப்பிரிதியென்னும் திருப்பதியிலே எழுந்தருளியிருக்கிறான். திருமாலிருஞ்சோலையிலே வந்து நிற்கிறான். ஒரு காலத்தில் முதலை வாயிலே அகப்பட்டுத் துடித்த கஜேந்திராழ்வானுடைய துன்பத்தைத் தொலைத்த அந்தப் பெருமான் இப்போது திருவேங்கட மலையைச் சென்று சேர்ந்து இருக்கிறான். அந்தத் திருவேங்கடத்தை நீயும் சென்று சேர் மனமே! அதுவும் இப்போது பிரம்மோத்ஸவம் நடக்கிறதே போகாமல் இருக்கலாமா...



“நெஞ்சே” என்பதில் இன்னொரு குறிப்பும் இருக்கிறது. நாம் நேரில் போனாலும் போகாவிட்டாலும் குறைந்த பட்சம் பிரம்மோத்ஸவம் நடக்கும் போது நம்முடைய நெஞ்சம் அவனோடு இருக்க வேண்டும். அவன் நித்ய வாசம் புரிகின்ற திருமலை திவ்ய தேசத்தோடு பொருந்தி இருக்க வேண்டும்.


நம்மால் போக முடியாவிட்டாலும் நம் நெஞ்சமாவது அங்கு போகட்டுமே. அந்த நெஞ்சைத் தடுப்பது யார்!







# புண்ணியங்களை புரட்டித் தரும் புரட்டாசிப் படையல்



– டாக்டர் இரா.அருண்குமார்,
புதுச்சேரி, 99448 02769

ஒரு மனிதன் நன்றாக வாழ வேண்டும் என்று சொன்னால், அவனிடத்தில் செல்வம் எனும் பணம் தேவை என்று சொல்லுகின்ற பொழுது ஒரு வார்த்தையைச் சொல்லுவது வழக்கம்.

நாளைக்கு எனக்கு ஆயிரம் ரூபாய் தேவை. யாரிடமாவது கேட்டுப் புரட்டிக் கொள்ள வேண்டும் என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள்.

இங்கே புரட்டிக் கொள்ளுதல் என்றால் உள்ளவர்களிடமும் கேட்டு சேகரித்துக் கொள்ளுதல் என்று பொருள்படும். எல்லாச் செல்வங்களும் வைத்திருப்பவன் இறைவன். அவன் திருவருள் மங்கல ஆசிகளாகக் கிடைத்து விட்டால், வாழ்வில் எல்லா வளங்களும் சேர்ந்து விடும். துன்பங்கள் மாறி புதிய வாழ்க்கை பிறந்து விடும். செல்வத்தை, தேவைக்குப் புரட்டுவது போல, இறைவனுடைய ஆசிகளைப் புரட்டுவதற்கு என்றே ஒரு மாதத்தை நம்முடைய முன்னோர்கள் வைத்திருக்கிறார்கள். அதுவே புரட்டாசி. ஆசிகளைப் புரட்டித் தரும் மாதம் என்பதால் இந்த மாதத்திற்குப் புரட்டாசி என்று பெயர்.

### புரட்டாசி சனிக்கிழமை படையல் ஏன்?

புரட்டாசி என்றால் மூன்று விஷயங்கள் நினைவிற்கு வரும்.

1) புரட்டாசி சனிக்கிழமையில் போடப்படும் படையல், 2) மங்கலகரமான மஞ்சள் ஆடைகளை அணிந்து கொண்டு திருப்பதியை நோக்கிச் செல்லுகின்ற யாத்திரை, 3) விண்ணை முட்டும் அளவுக்கு ஓங்கி ஒலிக்கின்ற “கோவிந்த” நாம கோஷம்.

பலருக்கும் குல தெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும், வரம் தரும் தெய்வமாகவும் விளங்குகின்ற பெருமாள் திருப்பதி பெருமாள். திருப்பதி பெருமாளுக்கு என்றே ஒதுக்கப்பட்ட மாதம் புரட்டாசி மாதம். புரட்டாசி மாதத்தில் திருவோண நட்சத்திரம் தான் அவருடைய அவதார திருநட்சத்திரம். அதை ஒட்டித்தான் திருமலையில் பிரம்மோத்ஸவம் நடக்கும். உலகெங்கிலும் இருந்து திருப்பதிக்கு லக்ஷக்கணக்கான மக்கள் உற்சவம் காண கூடுவார்கள். இந்தப் புரட்டாசி மாதத்தை “விரத மாதம்” என்றும் சொல்லும் வழக்கம் உண்டு.

பல குடும்பங்களில் புரட்டாசியில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், காலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, விரதமிருந்து, மதியம் தலை வாழை இலை போட்டு, சர்க்கரைப் பொங்கல், கொண்டைக்கடலை சுண்டல், பாயசம், தளிகை (பெருமாள்) வடை என்று அலங்காரமாக பலவித மான பிரசாதங்களைச் செய்து படைப்பார்கள்.

அன்றைய நாளில் பெரும்பாலும் “சித்ரான்னங்கள்” என்று சொல்லப்படும் புளியோதரை, எலுமிச்சைப்பழ சாதம், எள் கலந்த சாதம், தயிர்

சாதம், தேங்காய் சாதம் என்று பல வகையான சாதங்களைப் படைத்து, தேங்காயை உடைத்து, மாவிளக்கு போட்டு, தூபதீபங்கள் காட்டி வழிபடுவார்கள். சாம்பிராணி புகையைப் போட்டு மணி அடித்து வீட்டில் உள்ள அவ்வளவு பேரும் ஏக கோஷமாக "கோவிந்தா...கோவிந்தா" என்று கோஷத்தைப் போடுவார்கள். அன்றைக்கு யாரேனும் அதிதிகள் வந்தாலோ, விருந்தினர்கள் வந்தாலோ அவர்களுக்கு விருந்து கொடுத்து ஆசிர்வாதம் பெறுவார்கள்.

## மன்னிப்பு கேட்டால் மன்னிப்பான். மறைத்து விட்டால் தண்டிப்பான்!

பெரும்பாலான மக்களுக்கு திருப்பதி ஏழுமலையானிடம் பயமும் பக்தியும் உண்டு. தவறு செய்து விட்டால் கண்டிப்பாக தண்டிப்பான் என்கிற உணர்வு உண்டு. அதனால் மனரீதியாக தவறு செய்ய மாட்டார்கள். அப்படித் தவறு செய்து விட்டால் அவனிடத்திலே சென்று மன்னிப்பு கேட்டு நேர்த்திக்கடன் செய்து, உடனடியாக பிராயச்சித்தம் செய்து கொள்வார்கள். இது இன்றும் கிராமங்களில் குறிப்பாகத் தென் தமிழகத்தில் காணலாம். இதைக் கவியரசு கண்ணதாசன் அழகான பாடலில் *"ஊருக்கு மறைக்கும் உண்மைகள் எல்லாம் வேங்கடம் அறியுமடா! நீ உண்மையைச் சொல்லி நன்மையைக் கேட்டால், உன் கடன் தீருமடா"* என்று சொல்லி இருப்பார்.

கடன் என்றால் பாவங்கள் என்று பொருள். கலிகாலத்தில் நம்முடைய கடன்களைத் தீர்த்து வைப்பதையே தன் கடனாகக் (கடன் – கடமை) கொண்ட அவன் ஏழுமலையில் இருக்கிறான். உலகத்தில் உள்ள லட்சக்கணக்கான மக்கள் அவனை நம்புகின்றார்கள். நம்பி "கை" தொழுகின்றார்கள். அந்த நம்பி (இறைவன்) நமக்கு "கை" தருகின்ற மாதம் தான் புரட்டாசி மாதம்

## புரட்டாசி சனிக்கிழமையும், விரதத்தின் முக்கியத்துவமும்

சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறப்பானது. அதிலும் புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகவும் சிறந்தது.

பெருமாளுக்குரிய திருத்தலங்களில் திருப்பதி வேங்கடாசலபதி கோயில் மிகவும் உயர்வானதாகக் கருதப்படுகிறது. இங்கு பீமன் என்ற குயவன் வாழ்ந்து



## திருப்பதி உண்டியல்

பல குடும்பங்களில் வருடத்திற்கு ஒரு முறையோ, மூன்று அல்லது ஐந்து வருடத்திற்கு ஒரு முறையோ, திருப்பதி யாத்திரை சென்று வருவதை வழக்கமாக வைத்துக்கொண்டு அதற்கென்றே "திருப்பதி உண்டியல்" என்று தனி உண்டியலை வைத்து, அவ்வப்பொழுது அதில் காசு போடுவார்கள். இதை இரண்டு விதமாகச் செலவு செய்வார்கள்.

இந்த உண்டியல் பணத்திலிருந்து ஒரு வழிச் செலவாக திருப்பதி யாத்திரையை மேற்கொள்வர். அல்லது திருப்பதி யாத்திரை மேற்கொண்டு ஆனந்த நிலையத்தை வலம் வந்து உண்டியலில் இந்தப் பணத்தை அவனுக்கு உண்டியலோடு காணிக்கையாகச் செலுத்தி விட்டு புதிய உண்டியல் வாங்கி வந்து மஞ்சள் துணி முடிந்து சனிக்கிழமையில், மறுபடியும் தளிகை போட்டு காணிக்கை சேர்க்க ஆரம்பிப்பார்கள். இன்றைக்கும் கிராமங்களில் பல குடும்பங்களில் இந்தத் திருப்பதி உண்டியல் வழக்கம் உண்டு.

வந்தான். அவன் பெருமாளின் மிகத் தீவிர பக்தன். அவன் சனிக்கிழமைகளில் விரதம் இருப்பதாக சங்கல்பம் எடுத்துக் கொண்டான்.

ஆனால் மிகவும் ஏழையான பீமன் விரதம் என்பதற்காக கோயிலுக்குச் செல்லக் கூடிய சூழல் இல்லாமல் எப்போதும் மண்பாண்டப் பொருட்களைச் செய்து வந்தான். அப்படியே கோயிலுக்குச் சென்றாலும், பூஜை செய்யத் தெரியாது. அப்படி கோயிலுக்குச் சென்றாலும் கூட, ஸ்வாமியைப் பார்த்து “நீ எல்லாம்” என்ற வார்த்தையை மட்டும் சொல்லி விட்டு வந்து விடுவார்.

இந்நிலையில் கோயிலுக்கு போக நேரம் இல்லாததால், பெருமாளையே இங்கு அழைத்து விட்டால் என்ன என எண்ணினான். அதனால் களி மண்ணால் ஒரு பெருமாள் சிலையைச் செய்தான். அதை பூஜிக்க பூக்கள் வாங்க கூட பணம் இல்லை. அதனால்

## புரட்டாசியில் யாசகம்



எவ்வளவு கோடீஸ்வரனாக இருந்தாலும், புரட்டாசி தளிகையில் தன் வீட்டு அரிசியை வைத்து, சனிக்கிழமை அன்று பிரசாதங்களைச் செய்ய மாட்டார்கள். சனிக்கிழமை அன்று அதிகாலையில் எழுந்து, நீராடி, மஞ்சள் அல்லது காவி ஆடையைத் தரித்துக்கொள்வர். பின்னர் ஒரு பாத்திரத்திற்கு திருநாமம் இட்டு, அதற்கு துளசி மாலை சாத்தி பல வீடுகள் தோறும் சென்று “நாராயணா... கோவிந்தா...” என்று கோவிந்தனின் திருநாமங்களைக் கூறியபடி, பிக்ஷை பெறுவர். அதனைக் கொண்டு பிரசாதம் சமைத்து பரந்தாமனுக்குப் படைப்பர். புரட்டாசியில் இது மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாகும். இதன் மூலமாக ஒரு மனிதனுக்கு எப்பொழுதாகிலும் எந்தச் சூழ்நிலையும் வரலாம். அச்சூழலை அவன் எதிர்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும் என்கிற மனநிலை இதன் மூலம் வளரும்.

கோடீஸ்வரனாக இருந்தாலும் கூட அதுவும் அவன் இட்ட பிக்ஷை தான் என்று எண்ணுவதன் மூலம் அகங்காரம் ஒழியும். அகங்காரத்தை நீக்கிக் கொள்வதற்கு ஒரு நாளாவது மற்றவர்களிடம் யாசித்துக் கேள். பக்தியோடு யாசித்துக் கேள்.

இதன் மூலமாக இரண்டு நன்மைகள் ஏற்படும். 1) அகங்காரம் குறையும். 2) நம்மிடம் இருக்கக்கூடிய செல்வமெல்லாம் எந்த நேரத்திலும் மாறும் என்கிற உணர்வு பிறக்கும்.

நான், எனது என்கிற உணர்வுகள் தொலைந்து விட்டால் இறைவனுடைய பேரருள் எளிதாகக் கிடைத்து விடும். இதைத்தானே திருவள்ளுவரும், *‘‘யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்’’* என்றார்.

அந்த உயர்ந்த உலகம் என்பது திருமலை. அதனால்தான் அவன் இருக்கக் கூடிய திருமலையை ‘‘வைகுந்த வாசல்’’ என்று சொல்லுகின்றார்கள். அதனால்தான் அந்த பவித்ரமான திருமலையை நோக்கி நம்மைப் போன்ற மனிதர்களும், வானில் வசிக்கும் தேவர்களும் புரட்டாசி மாதத்தில் வந்து திருவேங்கடமுடையானை வழிபடுகின்றனர். புரட்டாசி மாதத்தில் கோவிந்த நாமம் சொல்லி, அடுத்த பதினோரு மாதங்களுக்குத் தேவையான நல்லாசிகளைப் புரட்டிக் கொள்வோம்.

தினமும் தன் வேலையில் மீதமாகும் சிறிதளவு களிமண்ணை வைத்து பூக்களை செய்து வந்தான். அப்படி தான் செய்த பூக்களைக் கோர்த்து, மண் பூ மாலையாகச் செய்து பெருமாளுக்கு அணிவித்தான்.

அந்நாட்டு அரசன் தொண்டைமானும் பெருமாளின் தீவிர பக்தன். அவன் சனிக்கிழமை களில் தங்கப்பூ மாலையை ஸ்வாமிக்கு அணி விப்பான். அப்படி அவன் ஒரு வாரத்தில் பெருமா ளுக்கு தங்கப் பூமாலை அணிவித்தான். மறு வாரத்தில் சென்று பார்க்கும் போது தங்கப் பூ மாலைக்கு பதிலாக களிமண்ணால் செய்யப்பட்ட மாலை பெருமாள் கழுத்தில் இருந்தது.

இதைப் பார்த்ததும் அங்குள்ள கோயில் அர்ச்சகர்கள், பராமரிப்பாளர்கள் மேல் சந்தேகம் அடைந்து குழப்பத்தில் ஆழ்ந்தான்.

அவன் கனவில் தோன்றிய பெருமாள், குயவ னின் பக்தியால், அவனின் களிமண் மாலையைத் தான் ஏற்றுக் கொண்டதாகவும், குயவனுக்குத் தேவையான உதவியைச் செய்யுமாறு அரசனிடம் கூறினார். திருமாலின் ஆணைப்படி குயவன் இருக் கும் இடத்திற்குச் சென்ற அரசன், அந்த பக்தரை கௌரவித்தான்.

பெருமாள் மீது குயவன் வைத்திருந்த பக்தியைக் கௌரவிக்கும் பொருட்டு, தற்போதும் கூட திருப்பதியில் மண் சட்டியில்தான் ஸ்வாமிக்கு நைவேத்யம் படைக்கப்படுகின்றது.

சனிக்கிழமையில் தான் சனி பகவான் அவ தரித்து, புரட்டாசி மாதத்திற்குச் சிறப்பைக் கொடுத்தார். இதன் காரணமாக புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமையில் விரதம் இருந்து பெருமாளை தரிசித்தால் சனியின் கெடுபலன்களில் இருந்து நம்மைக் காப்பார்.

### ஹரி பலம் நடுவோமா!

நெல்லிமரம் திருமாலின் அம்சமாகக் கருதப் படுகிறது. "ஹரி பலம்" என்றும் இதற்கு பெயருண்டு. வீட்டில் நெல்லி மரம் நட்டால் லக்ஷ்மியின் கடாக்ஷம் உண்டாகும். நெல்லிக்கனியை உணவில் சேர்த்தால் ஆரோக்கியம் கிடைப்பதுடன், புண்ணியமும் சேரும். நெல்லி மர நிழலில் அன்னதானம் செய்வது பன் மடங்கு புண்ணியம் தரும். திருமாலுக்குரிய ஏகாதசி விரதம் இருப்பவர்கள் மறுநாளான துவாதசி திதியன்று நெல்லிக்காயை உணவில் சேர்ப்பர். இரவில் மட்டும் உண்பது கூடாது.

### புரட்டாசியில் பிரம்மோத்ஸம்!

புரட்டாசி மாதத்தில் வரும் திருவோணம் திதியில் திருவேங்கடமுடையான் அவதரித்ததால், ஒவ்வொரு வருடமும் பிரம்மோத்ஸவம் கொடியேற்றத்துடன் துவங்கி திருவோணம் அன்று தீர்த்தவாரியோடு நிறைவுறும் விதத்தில் ஒன்பது நாட்கள் சிறப்பாக நடை பெறும். நாமும் இப்பிரம்மோத்ஸவத்தில் பங்கு பெற்று பரந்தாமனின் இன்னருளைப் பெறுவோம்.



## வாஸ்து தோஷம் இனியில்லை

- வீட்டில் வலம்புரிச் சங்கு இருந்தால் லக்ஷ்மி குபேரர் அருள் கிடைக்கும்.
- தொழில் வியாபாரம் செய்யுமிடத்தில் சங்கு இருந்தால் லாபம் பெருகும்.
- சங்கில் பால் வைத்து வழிபட்டால் ஆடை, ஆபரணம் சேரும்.
- சங்கில் தீர்த்தம் வைத்து வழிபட்டால் உடல் நலத்துடன் நீண்ட காலம் வாழலாம்.
- வெள்ளிக்கிழமையன்று வீட்டில் சங்குத்தீர்த்தம் தெளித்தால் வாஸ்து தோஷம் நீங்கும்.

இவ்வாறு நம்மால் முடிந்த வரை விடுமுறை நாட்களில், வெள்ளிக்கிழமைகளில் வீட்டில் உள்ள சங்கினை வழிபட்டு நலனை அடைவோம்.





# தினமும் ஆதி சேஷன் வழிபடும் வேங்கடவன்



ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி எழுந்தருளி இருக்கின்ற தலங்கள் ஏராளமாக இருப்பினும் திருமலகிரி என்கிற மலையின் மீது திருவேங்கடவன் எழுந்தருளி இருக்கும் தலம் ஒன்று ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ளது.

கலியுக கண்கண்ட தெய்வம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி சுயம்புவாக வெளிப்பட்ட இத்தலம் திருமலகிரி என்றே அழைக்கப்படுகிறது. கிருஷ்ணா மாவட்டம் ஜக்கய்யப்பேட்டை மண்டலம், திருமலகிரி கிராமத்தின் அருகில் உள்ள ஒரு சிறிய குன்றின் மீது திருவேங்கடவன் கருவறையில் வல்மீக (புற்று) வடிவத்தில் கோயில் கொண்டுள்ளார். திருமலை திருவேங்கடவன் என்ற பெயரிலேயே இங்கு மஹாவிஷ்ணு கோயில் கொண்டுள்ளது ஒரு சிறப்பாகும். பக்தர்கள் இந்தக் குன்றை இன்னொரு திருமலையாகக் கருதி வழிபடுகின்றனர்.



இந்த ஆலயத்தை நிர்மாணம் செய்வதற்கு முன்பாக இந்தத் திருமலையைச் சுற்றியுள்ள பகுதியில் பசு மேய்ப்பவர் ஒருவர் தன் பசுக்களை மேய்க்கக் கொண்டு செல்ல, அங்குள்ள புற்று ஒன்றின் மீது பசு பாலைச் சொரிந்ததைக் கண்டார். பசு மேய்ப்பவர் அந்தப் புற்றின் அருகில் சென்று புற்றில் ஸ்வாமி இருப்பதையும், பசு அவர் மீது பால் சொரிந்து கொண்டிருந்த அற்புதக் காட்சியையும் கண்டு அதிசயப்பட்டு தன் எஜமானரிடம் சென்று இந்த விவரத்தைத் தெரிவித்தார். எஜமானர் இது தெய்வச் செயல் என்று மகிழ்ந்து ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு விருப்பமான பசுவின் பால் மற்றும் நெய்யில் சர்க்கரைப் பொங்கல் தயாரித்து எடுத்து வந்து நிவேதனம் செய்து பரவசப்பட்டார். திருமலகிரியில் தவம் செய்த சப்த ரிஷிகளில் ஒருவரான ஸ்ரீபரத்வாஜ முனிவருக்கு சுவாமி வல்மீக (புற்று) வடிவில் காட்சி தந்ததாகத் தலபுராணம் குறிப்பிடுகின்றது.



திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம்,
கல்லிடைக்குறிச்சி, 98425 39275

திருமலகிரி வேங்கடவன் ஆலய தூப தீப நைவேத்தியங்களுக்காக ராஜா வேங்கடாத்ரி நாயுடு பயபக்தியுடன் சிறிது நிலத்தை எழுதி வைத்தார். தொடர்ந்து, ஆலய அர்ச்சகர் திருமலை நாகாச்சார் யலு பக்தர்களின் உதவியுடன் ஸ்வாமி வெளிப்பட்ட புற்றைச் சுற்றி கருவறை மற்றும் பிரகாரங்களை அமைத்ததாகவும் கூறப்படுகிறது.

திருமலகிரி திருவேங்கடவன் ஆலயம் செல்லும் பக்தர்கள் முதலில் திருமலையின் கீழ் உள்ள பிரதான வரவேற்பு வளைவை அடைகின்றனர். படிகளில் ஏறிச் செல்லும் பக்தர்கள் வழியில் ஸ்ரீவேங்கடேஸ்வரரின் திருப்பாதங்களைத் தரிசித்து முதன் முதலாக ஸ்வாமியின் பாத முத்திரை பட்ட இடத்தில் உள்ள ஸ்ரீபாத புஷ்கரிணியில் புனித நீராடுகின்றனர். ஆலய நுழைவாயிலை ஐந்து நிலை ராஜ கோபுரம் அலங்கரிக்கிறது. மஹா மண்டபத்தில் கொடி மரமும், கருடாழ்வார் சன்னதியும் உள்ளன. இங்குள்ள பஞ்ச லோகத்தினாலான உற்சவ மூர்த்தி ஸ்ரீதேவி பூதேவி யோடு காட்சி தருகிறார்.

இந்த ஆலயத்திற்கு அருகில் ஸ்ரீபிரகதாம்பா சமேத ஸ்ரீமல்லேஸ்வரர் க்ஷேத்ர பாலகராக எழுந்த ருளியிருக்கின்றார். மேலும் ஸ்ரீஅபய ஆஞ்சநேய ஸ்வாமி சன்னதியும் உள்ளது.

இந்தத் திருமலகிரி ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம் எத்தனையோ சிறப்புகளுக்கு சாட்சியாகும். இங்கு தினமும் காலை சூர்யோதயம் முதல் சூர்ய அஸ்தமனம் வரை மட்டுமே பக்தர்கள் திருமலகிரி வாசனைத் தரிசிக்க முடியும். ஒவ்வொரு நாளும் இரவு சாட்சாத் ஆதிசேஷன் இங்கு வந்து ஸ்வாமியைப் பூஜிப்பதாக உள்ள ஐதிகத்தின்படி

**திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் "ஸப்த கோ" பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே. "கோயிலுக்கு ஓர் கோமாதா" திட்டம் அதற்கு ஓர் சான்றாகும்.**

**ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், "கோ" பூஜை, "கோ" தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.**

தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் கல்ப விருக்ஷம், காமதேனு, மகா லட்சுமியும் வெளிப்பட்டனர். காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். இவ்வுலகில் காமதேனுவின் மூலமாகத்தான் கால்நடை இனமே தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன.



**இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோபிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.**



# ஸப்த "கோ" பிரதக்ஷிணை மந்திரம்

ஒவ்வொரு நாளும் ஆலயத்தை சூர்யோதயத்திற்குப் பின்னர் ஆறரைமணிக்கு மேல் திறக்கின்றனர். மீண்டும் மாலை ஆறரை மணிக்கு கோயில் நடை அடைக்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட நேரத்தில் மட்டுமே பக்தர்கள் அபிஷேக, அர்ச்சனைகள் செய்து ஸ்வாமியைத் தரிசிக்க முடியும்.

திருமலகிரி வேங்கடவனுக்கு பால்குண (பங்குனி) மாதம் கிராம உத்ஸவமும், சைத்ர (சித்திரை) மாதத்தில் கோலாகலமாக பிரம்மோத்ஸவமும் நடைபெறுகின்றன. மார்கழியில் அத்யயன உற்சவமும், வைகுண்ட ஏகாதசியும் பிரத்யேக உற்சவ நாட்களாகும்.

திருமலகிரி வாசனை சுற்றுப்புற கிராம மக்கள் தங்கள் குல தெய்வமாக ஆராதிப்பதுடன் தங்கள் அனைத்துக் கோரிக்கைகளையும் தவறாது தீர்த்து வைப்பார் என்று திடமாக நம்புகின்றனர். சனிக்கிழமை நாட்களில் தரிசனத்திற்கு ஏராளமான பக்தர்கள் வந்து அபிஷேகம், அர்ச்சனை, வழிபாடுகள் நடத்தி மகிழ்கின்றனர். இவ்வாறு சனிக்கிழமைகளில் வழிபட்டால் சனி தோஷம் விலகும் என்று நம்புகின்றனர். பக்த, தாச, பிரசன்ன போன்ற திருநாமங்களில் ஸ்ரீபரத்வாஜ மகா முனிவர் ஒன்பது ஆஞ்சனேயர்களை இந்த ஆலயத்தைச் சுற்றிலும் மலைக்குன்றில் பிரதிஷ்டை செய்தாராம். ஆனால் தற்போது ஐந்து அனுமன் சன்னதிகள் மட்டுமே காணமுடிகிறது.




**திருவேங்கடமுடையான் ஆகாசராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதி தேவியை நாராயண வனத்தில் திருமணம் செய்து கொண்டபிறகு, பத்மாவதி தேவியுடன் திருமலைக்குப் புறப்பட்டார். திருமலைக்கு வரும் வழியில் சித்தேஸ்வர ஸ்வாமி என்பவர் திருவேங்கடமுடையானை நினைத்து தவம் இருக்க, அந்தத் தவத்திற்கு மனமிறங்கி ஸ்வாமியும் அபய திருக்கரங்களுடன் எழுந்தருளி தரிசனம் அளித்ததாக தல புராணம் கூறுகின்றது. 1988ஆம் ஆண்டு முதல் இந்த ஆலயத்தை தி.தி.தேவஸ்தானம் நிர்வகித்து வருகின்றது. திருப்பதியிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வசதி இவ்வாலயத்திற்கு உள்ளது.**

சூர்யோதயத்திற்குப் பின்னர் ஆலயம் திறந்து சூர்ய அஸ்தமனத்திற்குள் அடைக்கப்பட்டுவிடும் திருமலகிரி ஸ்ரீவேங்கடேஸ்வரப் பெருமாள் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் இரவு வேளை மக்கள் நடமாட்டம் இல்லாத சமயத்தில் ஒரு சர்ப்பம் புற்றைச் சுற்றி வலம் வந்து ஸ்வாமியை மஞ்சள் குங்கும் இட்டு வணங்குவதாக ஒரு நம்பிக்கை உள்ளது. அதனால் தினமும் ஆலயம் மூடப்படும் போது அர்ச்சகர்கள் மூலவரின் முன்பு கிண்ணங்களில் மஞ்சள் குங்குமமும், ஒரு பாத்திரத்தில் பசும்பாலையும் வைத்துவிட்டுச் செல்கின்றனர்.

மறுநாள் காலை ஆலயக் கருவறையைத் திறக்கும்போது மூலவர் திருவேங்கடவன் மீது மஞ்சள் குங்குமம் சிதறிக் கிடப்பதும், கிண்ணத்தில் இருந்த பால் இல்லாமல் இருப்பதும் ஆதிசேஷனின் இரவு பூஜைக்கு அடையாளங்கள் என்று நம்புகின்றனர். அதனால் இந்த ஐதீகத்தின்படி இங்கு இரவு யாரும் மலை ஏறுவதில்லை.

சரித்திர மற்றும் புராண முக்கியத்துவம் வாய்ந்த இந்த திருமலகிரியில் திருவேங்கடவன் நிர்குண, நிராகார வடிவாகக் காட்சி தருவதனைத் தரிசித்துப் பலன் பெற நாம் ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம், ஜக்கயப்பேட்டை மண்டலம், திருமலகிரி கிராமத்திற்குச் செல்ல வேண்டும்.

ஐதராபாத் – விஜயவாடா நெடுஞ்சாலையில் சில்லக்கல்லுவிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவிலும், ஜக்கய்யப்பேட்டையிலிருந்து 3 கி.மீ. தொலைவிலும் திருமலகிரி உள்ளது. ஜக்கய்யப்பேட்டையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் வேதாத்ரி ஸ்ரீயோகானந்த ஸ்ரீலட்சுமிநரசிம்மர் ஆலயம் உள்ளது. இத்தலத்தில் ஸ்ரீநரசிம்மர் ஐந்து திருவுருவங்களில் எழுந்தருளி இருப்பது இதன் சிறப்பாகும்.




*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# நித்திய சூரியாய் மாறிய சுமந்திரர்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

மகாராஜா ஒருவரிடம் பணிபுரியும் மந்திரி, தேரோட்டி முதலானவர்கள் அவரிடமிருந்து பெறும் சம்பளத்திற்காகப் பணி புரியாமல் உண்மையான நலம் விரும்பிகளாக அமைந்து விட்டால் அந்த மகா ராஜாதான் எவ்வளவு அதிர்ஷ்டம் செய்தவராக இருப்பார்? தசரதருக்கு வாய்த்த சுமந்திரரும், திருதராஷ்டிரனுக்கு வாய்த்த சஞ்சயனும் அப்படிப் பட்ட நலம் விரும்பிகளாகவே அமைந்து விட்டனர்.

தசரதரைப் போலவே வயோதிகரான சுமந்திரரை அவருடைய அந்தரங்கக் காரியதரிசி, ஆலோசகர், மந்திரி, நண்பர் என்று எப்படி வேண்டு மானாலும் கூறலாம். தசரதர், ஸ்ரீராமர், பரதன் ஆகியோருக்கு சுமந்திரர் உகந்த சாரதியாவார்.

ஸ்ரீசீதாராம கல்யாணம் நடந்து முடிந்து சில வருட காலத்தில், ஒரு நாள் தசரத மகா ராஜா ஸ்ரீராம பிரானுக்கு பட்டாபிஷேகம் செய்ய முடிவு செய்தார்.

மகிழ்ச்சிகரமான அச்செய்தியை ஸ்ரீராமருக்குத் தெரிவிக்க தசரதர் முதலில் சுமந்திரரைத்தான் அழைக்கிறார். "சுமந்திரா! உடனே ஸ்ரீராமனைச் சகல மரியாதைகளுடன் அவைக்கு அழைத்து வா!". அவைக்கு வந்து விஷயத்தைக் கேட்ட ஸ்ரீராமபிரான், "அப்படியா தந்தையே, தங்கள் உத்தரவு!" என்று கேட்டுக் கொண்டு தம்முடைய அரண்மனைக்குத் திரும்பி விட்டார்.

சற்று நேரம் கழித்து மீண்டும் ஒரு முறை தமது பிரியமான மகனைப் பார்க்க வேண்டுமென்று தசரதருக்குத் தோன்றியது. மீண்டும் ஒரு முறை சுமந்திரர் அனுப்பப்பட்டார்.

சுமந்திரர் சென்று ஸ்ரீராமபிரானை அழைத்து வர, "என் பிரியமான மகனே! எனக்கென்னவோ வழக்கத்துக்கு மாறான சகுனங்கள் தோன்றுகின் றன. எனவே, நாளைக் காலையிலேயே உனக்குப் பட்டாபிஷேகம் நடத்த விரும்புகின்றேன்" என்றார் தசரதர் சற்றே பதற்றத்துடன், "சரி தந்தையே!" என்று பதிலளித்த ஸ்ரீராம பிரானை மீண்டும் தேரில் ஏற்றிக் கொண்டு போய் விட்டார் சுமந்திரர்.

ஒரே இரவில் விஷயங்கள் தலைகீழாயின. கைகேயி, ஸ்ரீராமனை காட்டிற்கு அனுப்பி விட்டுத் தான் பெற்ற மகனாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த வேண்டும் என்று (தசரதரிடமிருந்து தான் ஏற்கனவே பெற்றிருந்த இரண்டு வரங்களைச் சுட்டிக் காட்டி) பிடிவாதம் பிடித்தாள்.

"மகாராஜா ஸ்ரீராமனைக் காண விரும்புகிறார். உடனே அழைத்து வாருங்கள்!" என்று கைகேயி கூற, மீண்டும் ஒரு முறை ஸ்ரீராமபிரானின் தனி அரண்மனைக்கு சுமந்திரர் சென்று ஸ்ரீராமரை தேரில் ஏற்றிக் கொண்டு கைகேயியின் அரண்மனைக்கு வருகிறார். பட்டாபிஷேகத்திற்கு பதிலாக வனவாசம் போகச் சொல்லி உத்தரவாகிறது. அதனையும் அன்றலர்ந்த செந்தாமரையாய் மலர்ந்த திருமுகத்துடன் ஸ்ரீராமபிரான் ஏற்றுக்கொள்கிறார்.

தசரதருக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்த சுமந்திரர் ஸ்ரீராமபிரானை வனவாசம் செல்லச் சொன்ன கைகேயியைப் பார்த்துச் சற்றும் பயமின்றிப் பேசிய வார்த்தைகள் ஒரு முக்கியமான உண்மையை இவ்வுலகிற்கு வெளிப்படுத்துகின்றன.

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

**திருமலையானின் அக்ஷர தீபிகை**



# ஸப்தகிரி

மலர் எழுத்தால் ஸ்வாமியை அர்ச்சிக்கும் ஸப்தகிரி உங்களுடையது. அதனை மேன்மேலும் வளர்ச்சியடைய செய்வதும் ஸ்ரீவாரி சேவையே...

- பரந்தாமனை தரிசிப்பதற்கும், அவரைச் சென்றடைவதற்கும் எத்தனையோ வழிகள்.
- அனாதைகளின் காப்பாளன், ஆபத்தைத் தவிர்ப்பவனான அந்த ஏழுமலையானை அக்ஷர (எழுத்துப்) பூவினால் ஆராதிக்கின்றனர்.
- திருமலையானின் அக்ஷரப் பிரசாதமான ஸப்தகிரியைப் படிப்பதும், படிக்க வைப்பதும் அவனுக்குச் செய்யும் திருத்தொண்டே.
- "ஸப்தகிரி" படியுங்கள். உங்கள் அன்பானவர் களையும் படிக்க வையுங்கள். திங்கள்தோறும் திருமலையானை இந்த ஸப்தகிரி மூலம் தரிசியுங்கள். சிறப்பைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் 'ஸப்தகிரி' வாசகரானால்... உங்கள் அன்பானவர்களுக்குப் பரிசாக அளியுங்கள். சந்தா செலுத்த வையுங்கள். உங்கள் பக்கத்து வீட்டாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர் களுக்கும் ஸப்தகிரி குறித்து கூறுங்கள்.
- உங்கள் அன்பானவர்களையும் ஸப்தகிரி மூலம் ஸ்வாமி திருவருளைப் பெற வையுங்கள்.


"கல் மனம் கொண்ட கைகேயியே! உன்னுடைய தகப்பனாராகிய கேகய மகாராஜா ஒருமுறை தனக்குத்தானே சிரித்துக் கொண்டார். அவர் அருகில் இருந்த உன்னுடைய தாய், நீங்கள் எதற்காக இப்படி திடீரென்று சிரித்தீர்கள்?" என்று கேட்டாள். உன் தகப்பனாரும் "மனிதர்கள் அல்லாத இதர ஜந்துக்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளும் ரகசிய சக்தியை ஒரு கந்தர்வன் மூலம் நான் பெற்றிருப்பதால் அருகில் ஓடிக் கொண்டிருந்த சில எறும்புகளின் சுவாரஸ்யமான பேச்சுகளைக் கேட்டுச் சிரித்து விட்டேன்" என்று பதில் கூறினார். உன் தாயோ, "அப்படியானால் அந்த ரகசியத்தை எனக்கும் சொல்லிக் கொடுங்கள்!" என்று நச்சரித்தாள். "அவ்வாறு செய்தால் நான் தலை வெடித்து இறந்து விடுவேன்" என்று சொல்ல, "நீங்கள் தலை வெடித்து இறந்தாலும் பரவாயில்லை. எனக்கு அந்த ரகசியத்தைச் சொல்லிக் கொடுங்கள்!" என்று பிடிவாதம் பிடித்தாள். அப்படிப்பட்ட தாயாருக்குப் பிறந்த பெண்ணல்லவா நீ? எனவே தான் இப்படி அனைவருடைய அபிப்பிராயத்துக்கும் விரோதமாக நடந்து கொள்கின்றாய்" என கைகேயியைக் கடிந்து கொண்டார் சுமந்திரர்.

இதன் பின்னர் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர் ஆகிய மூவரையும் சுமந்திரர் குகனுடைய சிருங்கிபேர புரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார். அதன் பின்னர் தசரதரின் மரணம், பரத சத்துருக்னர்கள் கேகய தேசத்திலிருந்து அயோத்திக்குத் திரும்பி வந்தது, பரதன் உள்ளிட்டவர்கள் ஸ்ரீராமபிரானைச் சந்திக்க வனத்திற்குக் கிளம்புதல், பரதன் ஸ்ரீராமபிரானின் பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு அயோத்தி திரும்புதல், பாதுகைகளுடன் கிளம்பிய பரத சத்துருக்னர்கள் நந்திக் கிராமத்திற்குச் சென்று தங்கி அங்கிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்தல், ஸ்ரீராம பட்டாபிஷேகம் ஆகிய அனைத்து நிகழ்வுகளிலும் சுமந்திரர் முக்கியத்துவம் பெறுகிறார்.

இங்ஙனம் அயோத்தி மன்னர்களின் நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய் விளங்கிய சுமந்திரர் அயோத்தி வாசிகளின் ஓர் அற்புதப் படைப்பு என்றே கூற வேண்டும். நாடு வளம் பெற சுமந்திரரைப் போன்ற நல்லவர்கள் தேவை என்பதை ஸ்ரீமத் ராமாயணம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

*தொடர்ந்து அலசுவோம்...*

## 2024, அக்டோபர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 02 | மகாளய அமாவாசை, காந்தி ஜெயந்தி. |
| 04–12 | திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம், திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்திரி உத்ஸவம். |
| 08 | திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை. |
| 09 | சரஸ்வதி பூஜை, 11 துர்காஷ்டமி. |
| 12 | மஹாநவமி, விஜய தசமி. |
| 17 | சத்ரவாடா (நகரி) ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 28–30 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம். |
| 31 | நரக சதுர்தசி, தீபாவளி அமாவாசை. |

# பிரம்மாண்ட நாயகனின் பிரம்மோத்ஸவம்



கலியுக வைகுந்தமாகத் திகழும் திருமலையில் நித்திய கல்யாண சக்கரவர்த்தியாகக் கொலுவீற்றிருக்கும் திருவேங்கடமுடையானுக்கு வருடம் முழுவதும் பல்வேறு சேவைகளும், உத்ஸவங்களும் நடைபெற்று வருகின்றன. எத்தனையோ சேவைகளும், உத்ஸவங்களும் நடைபெற்றாலும் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது பிரம்மோத்ஸவம் ஆகும். பிரம்ம தேவனே முன்னின்று நடத்தப்படுவதாக கருதப்படும் இந்த உத்ஸவத்தின் ஒவ்வொரு நிகழ்வும் சிறப்பானதாகத் திகழ்கின்றது.

நாராயணகிரியில் உள்ள ஸ்வாமி திருக்குளத்தின் கரை ஓரத்தில் புரட்டாசி மாதம் ஏகாதசி அன்று திங்கட்கிழமையில் திருவோண நட்சத்திரம் சித்த யோகத்தில் ஸ்ரீநிவாசன் வேங்கடாத்ரியில் அவதரித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

வைகுந்தத்தை விடுத்து உலக நன்மைக்காக வேங்கடாத்ரியில் வீற்றிருந்த ஸ்ரீநிவாசனைத் தேடிக்கொண்டு பிரம்ம தேவனும், பிற தேவதைகளும் இந்த வேங்கடாத்ரிக்கு வருகை புரிந்து ஸ்வாமியைத் தரிசித்து மகிழ்ச்சியுற்றனர். அச்சமயத்தில்,

த்வஜாரோஹண பூர்வச்ச கார்ய ஸ்தவ மஹோத்ஸவ:
ஸச த்வயா மஹாபூமாஸ் அங்கீகார்ய: ஸ்ரீயாஸஹ
– வராக புராணம்.

ச்ரிய:பதி! துவஜாரோஹணத்தோடு (கருடக் கொடி ஏற்றப்பட்டு) தங்களுக்கு உத்ஸவம் நடத்திட வேண்டும் என விரும்புகிறேன். மகாபிரபு! உத்ஸவத்தில் தாங்கள் உபயதேவியரோடு சேர்ந்து அருள் புரிந்திட வேண்டும் என பிரம்மதேவன் ஸ்ரீநிவாசரிடம் வேண்டினார்.

ஸ்வாமியும் தங்களின் விருப்பப்படியே நடத்திடுங்கள் எனக் கூறினார். பிரம்மதேவனும் உத்ஸவத்தை நடத்தினார். ஆதலால் இந்த உத்ஸவம் பிரம்மோத்ஸவம் என்று ஆனது. அன்றிலிருந்து இந்த உத்ஸவத்தை பிரம்மோத்ஸவமாகவே கொண்டாடி வருகின்றனர். அதுமட்டுமின்றி பிரம்மாண்டமே மகிழ்ச்சியுறும்படி நடைபெறும் உத்ஸவமானதால் பிரம்மோத்ஸவம் என்றனர்.

இவ்விதமாக முதல் முறையாக வேங்கடவனுக்கு பிரம்ம தேவனே முன்னின்று உத்ஸவத்தை நடத்திட, தேவதைகள் அனைவரும் பங்கு கொண்டனர். இவ்வாறு புராண காலம் தொட்டே உத்ஸவங்கள் நடைபெற்று வருகின்றன. வரலாற்று சிறப்புமிக்க காலத்திலும் கூட எத்தனையோ மன்னர்களும் ஸ்வாமிக்கு இது போன்று உத்ஸவங்களை நடத்தி உள்ளனர். தம் அரசின் வளர்ச்சி, தங்களின் வெற்றி போன்றவற்றின் போதும் ஸ்வாமிக்கு நன்றி செலுத்திடும் வகையில் அரசர்கள் இந்த உத்ஸவங்களை நடத்தியதாகக் கூறப்படுகின்றது. திருமலை திருப்பதியில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டு களில் இந்த உத்ஸவங்களைக் குறித்து கூறப்பட்டுள்ளன.



7ஆம் நூற்றாண்டிற்கு முன்பு வரை திருமலையில் துவஜாரோஹணமும், துவஜா அவரோஹணமும் மட்டுமே நடத்தப்பட்டு மற்ற உத்ஸவங்கள் திருச்சானூரில் நடத்தினர்.

பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னர் பல்லவ ராணி சாமவை மணவாளப் பெருமாள் எனும் பெயரில் வெள்ளி உத்ஸவ மூர்த்தியை அளித்தார். இந்த உத்ஸவ மூர்த்தியே போக ஸ்ரீநிவாச மூர்த்தியாவார். புரட்டாசி மாதத்தில் நடைபெறுகின்ற பிரம்மோத்ஸவத்திற்கு முன்னதாக இந்த உத்ஸவ மூர்த்தியைத் திருமாட வீதிகளில் எழுந்து அருளச் செய்யும்படி ராணி கூறியதாகக் கூறப்படுகிறது. இந்த சிலை வழங்கப்பட்ட பின்னர்தான் திருமலையிலேயே முழுவதுமாக உத்ஸவங்கள் நடைபெற்றதாகக் கூட கூறப்படுகின்றது.

தென் ஆந்திர மற்றும் கஞ்சியை ஆட்சி புரிந்து வந்த நெல்லூரு சோடுல தெலுங்கு சோழ அரசன் திரிபுவன சக்கரவர்த்தியாகப் போற்றப்பட்ட விஜய கொண்ட கோபாலன் (1248–1263) 1254ஆம் வருடம் சைத்ர (சித்திரை) மாதத்தில் உத்ஸவங்களை நடத்தினார்.

திருவேங்கடநாத யாதவ ராயர் (1321–1337) தன்னுடைய ஆட்சிக் காலத்தில் 1328ஆம் ஆண்டில் ஆஷாட (ஆடி) மாதத்தில் "ஆடித் திருநாள்" எனும் பெயரில் உத்ஸவங்களை நடத்தினார். இல்லத்தூர் பகுதியில் இருந்த பொங்கல்லூரு கிராமத்தின் வருவாயிலிருந்து சமமான அளவினை திருவேங்கடமுடையா னுக்கு சர்வ மானியமாக தானம் அளித்தார். இந்தத் தானம் ஆனி மாதத்தில் நடைபெறுகின்ற பிரம்மோத்ஸவ செலவிற்காக அளிக்கும்படி செய்தார்.

விஜய நகர அரசினை ஆட்சி புரிந்த சங்கம வம்சத்தின் இரண்டாவது ஹரிஹர ராயர் (1379–1399) தன்னுடைய ஆட்சி காலத்தில் 1388ஆம் வருடம் ஜனவரி 18ஆம் தேதி புந்தோடு எனும் கிராமத்தினை ஸ்வாமிக்கு தானமாக அளித்து அந்த கிராமத்தில் இருந்து வரும் ஆதாயத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் மாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம் நடைபெற ஏற்பாடு செய்தார்.

விஜயநகர அரசினை ஆட்சிபுரிந்த சங்கம வம்சத்தின் இரண்டாவது தேவராயர் (1419–1444) தன்னுடைய ஆட்சி காலத்தில் 1429ஆம் வருடம் டிசம்பர் மாதம் 5ஆம் தேதியன்று திருமலைக்கு வருகை புரிந்து திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்து ஆஸ்வயுஜ (ஐப்பசி) மாதத்தில் புனர்வசு நட்சத்திரம் முதல் சுவாதி நட்சத்திரம் வரை ஒன்பது நாட்கள் பிரம்மோத்ஸவம் நடைபெற ஏற்பாடு செய்தார்.

இவ்விதமாக பல்வேறு அரசர்கள் ஏற்பாடு செய்ததால் விஜய நகர அரசினை ஆட்சி புரிந்த சாளுவ வம்சத்தைச் சேர்ந்த சாளுவ நரசிம்ம ராயர் ஆட்சி காலத்தில் வருடத்திற்கு ஏழு முறை பிரம்மோத்ஸவங்கள் நடைபெற்றதாக வரலாறு கூறுகின்றது.

விஜய நகர அரசினை ஆட்சி புரிந்த ஸ்ரீகிருஷ்ணதேவ ராயர் (1509–1529) ஏழு முறை திருமலை திருத்தலத்தினைத் தரிசனம் செய்தார். 1513ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் தேதியும், அதே வருடம் ஜூன் மாதம் 13ஆம் தேதியும் திருவேங்கடமுடையானைத் தரிசனம் செய்தார். இச்சமயத்தில் தான் பல காணிக்கைகளை வழங்கியதோடு, பல கிராமங்களையும் ஸ்வாமிக்கு மானியமாக அளித்து தன் பெற்றோரின் நினைவாக ஒவ்வொரு வருடமும்

தை மாதத்தில் உத்ஸவம் நடைபெற ஏற்பாடு செய்ததாக வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன.

ஸ்ரீகிருஷ்ண தேவராயருக்கு அடுத்ததாக அச்சுத தேவராயர் திருமலை ஆலயத்தில் 1529 ஆம் ஆண்டில் விஜயநகர அரசின் சக்கரவர்த்தி யாக முடிசூட்டிக் கொண்டார். பின்னர் அவர் 1530 ஆம் வருடத்தில் அச்சுதராயர் பிரம்மோத்ஸவம் எனும் பெயரில் பிரம்மோத்ஸவம் நடத்தினார்.

இவ்வாறாக 1583 ஆம் வருடத்தில் சுமார் ஒவ்வொரு மாதமும் பிரம்மோத்ஸவம் நடை பெற்றது. காலமாற்றத்தால் அரசுகளும் மாறின. பிரம்மோத்ஸவங்களும் நின்று போயின. இறுதி யாக பிரம்ம தேவனால் துவக்கி வைக்கப்பட்ட பிரம்மோத்ஸவம் மட்டுமே சிறப்பாக ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகின்றது. பொதுவாக எந்தவொரு திருக்கோயிலிலும் ஏதாவது ஒரு மாதத்தில் ஒரு திதியன்று உத்ஸவங்கள் ஆரம்பமாகும். ஆனால், திருமலையில் நிறைவு நாளினைக் கணக்கில் கொண்டு பிரம்மோத்ஸ வம் நடைபெறுவது சிறப்பாகும்.

அதாவது புரட்டாசி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தன்று அவப்ருதம் நடைபெறும்படி 9 நாட்கள் முன்னதாகத் துவங்கி உத்ஸவங்களை நடத்துவர். அவப்ருதம் என்றால் சக்கரஸ்நானம் (தீர்த்தவாரி உத்ஸவம்). பொதுவாக திருமலை யில் பிரம்மோத்ஸவம் புரட்டாசி மாதம் நவராத்திரி விழாவின் போதே நடைபெறும். ஆனால் தெலுங்கு பஞ்சாங்கத்தின் சாந்திரமானம்படி மூன்று வருடங்களுக்கு ஒரு முறை அதிக மாதம் வரும். இச்சமயங்களில் புரட்டாசி மாதத்திலும், ஐப்பசி மாதத்திலும் என இரு பிரம்மோத்ஸவங் கள் நடைபெறும். எனவே, புரட்டாசி மாதத்தில் திருவேங்கடமுடையானின் அவதார நாளினை முன்னிட்டு ஒரு பிரம்மோத்ஸவம், நவராத்திரி விழாவில் ஒரு பிரம்மோத்ஸவம் என இரண்டு பிரம்மோத்ஸவங்கள் நடைபெறும். முதல் பிரம்மோத்ஸவத்தை வருடாந்திர பிரம்மோத்ஸ வம் என்றும், இரண்டாவதாக நடைபெறுவதை நவராத்திரி பிரம்மோத்ஸவம் என்றும் கூறுவர். இவ்விரு பிரம்மோத்ஸவங்களின் போதும் இரண்டாவதாக நடைபெறும் நவராத்திரி பிரம்



மோத்ஸவத்தில் துவஜாரோஹணமும், துவஜாவ ரோஹணமும் நடைபெறாது. மேலும், மரத்தேருக்குப் பதிலாக தங்கத்திருத்தேர் உத்ஸவம் நடைபெறும். அதேபோன்று வருடாந்திர பிரம்மோத்ஸவத்தில் தினமும் இரவு வாகன சேவை முடிந்த பின்னர் திருக்கோயிலினுள் உள்ள திருமலராயர் மண்டபத் தில் தங்கத்திருச்சியில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து ஆஸ்தானம் நடத்துவர். ஆனால், நவராத்திரி உத்ஸவத்தின்போது ரங்க நாயகர் மண்டபத்தில் தங்க சேஷ வாகனத்தில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து ஆஸ்தானம் நடத்துவர்.

பிரம்மோத்ஸவம் துவங்குவதற்கு முந்தைய செவ்வாய்க்கிழமையன்று கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் எனும் ஆலய சுத்தி நடைபெறும். பிரம்மோத்ஸவம் துவங்குவதற்கு முந்தைய நாள் அங்குரார்ப்பணம் நடைபெறும். ஸ்வாமியின் சேனாதிபதியான விஷ்வக்சேனர் திருவீதிவலம் வந்து வசந்த மண்டபத்திற்குள் சென்று புற்று மண்ணை சேகரித்து கொண்டு திருக்கோயிலுக் குள் அமைந்துள்ள யாக சாலையில் மண்பாண்டத் தில் நவதானியங்களை இட்டு அங்குரார்ப்பணம் செய்திடுவர். பிரம்மோத்ஸவம் துவஜாரோஹணத் துடன் துவங்கும். முதல் நாள் மாலை திருக் கோயிலிற்குள் கொடி மரத்தில் கருடக் கொடியை



ஏற்றுவதே துவஜாரோஹணமாகும். அன்று இரவு முதற் கொண்டே வாகன சேவைகள் நடைபெறும்.

இப்பிரம்மோத்ஸவத்தில் உற்சவ மூர்த்தியான திருமலையப்ப ஸ்வாமி பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி, திருமாட வீதிகளில் தன்னுடைய தரிசனத்திற்காக காத்திருக்கும் பக்தர்களுக்கு அருள் புரிந்திடுவார். வெவ்வேறு வடிவங்களிலும், அலங்காரங்களிலும், சில வாகனங்களில் தனித் தும், சில வாகனங்களில் உபய தேவிமார்களுடன் எழுந்தருளுவார்.

சிறிய சேஷ வாகனம், ஹம்ச வாகனம், சிம்ம வாகனம், பல்லக்கில் மோகினி அவதாரம், கருடன், அனுமன், யானை, சூரியப்பிரபை, சந்திரப் பிரபை, குதிரை என வெவ்வேறு வாகனங்களில் திருமலையப்ப ஸ்வாமி தனித்து எழுந்தருள்வார்.

பெரிய சேஷன், முத்துப்பந்தல், கல்ப விருக்ஷம், சர்வபூபால வாகனங்களோடு, தங்கத்திருத்தேர், பெரிய மரத்தேர் என இவற்றில் இரு தேவிமார்க ளுடன் ஸ்வாமி எழுந்தருள்வார். பாலகிருஷ்ணன், காளிய மர்த்தன கிருஷ்ணன், யோக நரசிம்மர், இராமன் என பல வடிவங்களில் அலங்கரிக் கப்பட்ட வாகன சேவையில் எழுந்தருளும் ஸ்வாமி சரஸ்வதி தேவி வடிவில் ஹம்ச வாகனத்திலும், அமிர்தத்தை பங்கிட்டதை குறிக் கும் விதமாக மோகினி வடிவம் ஏற்று பல்லக்கிலும் எழுந்தருள்வது பக்தர்களுக்கு கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திடும்.

பிரம்மோத்ஸவத்தின் ஒன்பதாம் நாள் காலை ஸ்ரீதேவி, பூதேவியோடு திருமலையப்ப ஸ்வாமி திருச்சி வாகனத்தில் எழுந்தருளி வராஹ ஸ்வாமி ஆலயத்தை அடைந்திடுவார். ஸ்வாமியின் ஆயுதமான சக்கரத்தாழ்வாரும் ஸ்வாமியைப் பின் தொடர்வார். வராஹ ஸ்வாமி ஆலயத்தில் ஸ்வாமிக்கும், சக்கரத்தாழ்வா ருக்கும் ஸ்நபன திருமஞ்சனம் நடைபெறும். பின்னர் சக்கரத்தாழ்வாரை ஸ்வாமி புஷ்கரணிக்கு (திருக்குளத்திற்கு) கொண்டு சென்று புனிதமான தீர்த்தவாரி நிகழ்த்துவர். இதுவே சக்கரஸ்நானம். இதுவே அவப்ருதம். அன்றைய தினம் மாலை பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு கொடி மரத்தில் ஏற்றப்பட்ட கருடக் கொடியைக் கீழே இறக்குவர். அதாவது துவஜாவரோஹணம் செய்வர். அதாவது கருடக் கொடியை ஏற்றுவது என்பது பிரம்மோத்ஸ வத்தில் அனைத்து தேவதைகளையும் அழைப்ப தாகும். கருடக் கொடியை இறக்குவது விழாவிற்கு வந்தவர்களை வழியனுப்புவதோடு முடிவடைவதாகும்.

இவ்விதமாக நடைபெறும் பிரம்மாண்ட நாயகனின் பிரம்மோத்ஸவம் உலகினையே உற்சாகப்படுத்துகின்றது. ஒவ்வொரு வாகன சேவை தரிசனத்திற்கு ஒவ்வொரு பலன் உண்டு என்பது சான்றோர் கருத்து. எனவே இந்த வருடம் அக்டோபர் 04 ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு கோலகலமாக பிரம்மோத்ஸவம் நடைபெற உள்ளது. பக்தர்கள் அனைவரும் பிரம்மாண்ட நாயகனின் பிரம்மோத்ஸவத்தில் பங்கு கொண்டு திருவேங்கடவனின் திருவருளைப் பெறுவார்களாக.

தெலுங்கு மூலம் :
முனைவர் ஐ.எல். என். சந்திரசேகர ராவ்.
தமிழாக்கம் :
திரு. வ.ஓ. சுரேஷ்.

# விநாயகரின் சிறப்புகள்

– திருமதி கே. சுப்புலெட்சுமி,
பரமக்குடி, 95007 25676.



மூலாதாரக் கடவுளான விநாயகரின் திருநாமங்கள் பலவாகும். கணபதி, ஹேரம்ப, விநாயகர், ஏகத்தர், விகடர், கரிமுகன், கற்பக விநாயகர், விக்னராஜன், முன்னவன், லம்போதரன், தூமகேது, வல்லபை கணபதி, நிருத்த கணபதி, மோதகப் பிரியன், ஞானகாரகன் எனப் பல்வேறு திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மேற்காணும்படி பல்வேறு திருநாமங்களைக் கொண்டு திகழும் விநாயகப் பெருமானின் உருவ தத்துவம் காண்போம். இடுப்புக்கு மேலே கழுத்துவரை தேவ உடலாகும். தலையோ யானை. எனவே மிருக தலை. இடுப்புக்கு கீழே மனிதவுடலாகும். தேவ, மனித விலங்குகள் அனைத்திலும் அமைந்த நிலை விநாயகர் திருவுருவம். பாசம் ஏந்திய திருக்கரம் படைப்புத் தொழிலைக் குறிக்கும். அங்குசம் ஏந்திய திருக்கரம் அழித்தலை உணர்த்தும். அழித்தல் என்பது இல்லாமலே செய்வதென்று பொருளாகாது. ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டாக்குதல். எதுவும் முற்றாக அழிவதில்லை. அழிப்பதிலிருந்து புதியன ஆக்கமாகி வரும் என்பதே நியதியாகும்.

மோதகம் ஏந்திய திருக்கரம் அருளாகும். மோதகத்துள் இருப்பது ஞானமாகும். பூரணம் என்பது மறைத்தலாகும். மறை பொருளின் உண்மை எளிதில் புலனாகாது. அறிவின் முதிர்ச்சியால் பக்தியின் உயரிய சக்தியால் மறைந்துள்ள உண்மைப் பொருளை அறிய வேண்டி மறைத்தல் தொழில் நிகழ்கிறது. காதுகள் அசைவனவாகும். அவை பக்தர்களின் துயர்கள் அவ்வப்போது துடைப்பதைக் குறிக்கும். மூன்று கண்களும் சூரியன், சந்திரன், அக்னியைக் குறிப்பதாகும். பானை போன்ற வயிறு. இது அண்டமதை தன்னுள் அடக்கி உள்ள நிலையை, அடக்கி ஆளும் நிலையைக் குறிக்கும். மூஞ்சூறு வாகனம் எளிய, சிறிய பிராணிக்கும் இலகுவாக தனது எளிவந்த தன்மையைக் குறிக்கும்.

சில இவற்றில் காரணப் பெயர்களாகவும் அமைந்துள்ளன.

திருநெல்வேலி – வெள்ளந்தாங்கி விநாயகர்

விருத்தாசலம் – ஆழத்துப் பிள்ளையார்

திருநாரையூர் – பொள்ளாப் பிள்ளையார்

காஞ்சியில் விகர சக்கர விநாயகர், சீர்காழியில் ஆபத்தைக் காத்த விநாயகர், ஓம்கார வடிவம் பிரணவ விநாயகர், மதுரை – முக்குறுணிப் பிள்ளையார் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் அருள்பாலிக்கிறார். பிள்ளையார் பட்டியில் கற்பக விநாயகர். இவ்விரு விநாயகப் பெருமானுக்கும்

விநாயக சதுர்த்தி நாளில் முக்குறுணி அரிசி (பதினெட்டுப்படி) இன்றைய கணக்குப்படி 27 கிலோ அரிசி கொண்டு, அந்த அரிசி மாவினால் செய்யப்பட்ட மிகப் பெரிய கொழுக்கட்டை நிவேதனம் செய்யப்படும். மிகப் பெரிய தடிமனான கம்பியில் கட்டித் தொங்கவிட்டு நான்கு பேர் தூக்கி வருவார்கள். ஒரே கொழுக்கட்டை நிவேதனம் செய்த பின்னர் பிரசாதமாக வினியோகிக்கப்படும். தும்பிக்கையில் உள்ள மோதகம் – வெளிப்புறம் மாவினால் ஆனது. அதுவே அண்டம் எனப்படும். மாயை எனவும் கூறலாம். மாயையை நீக்கினால் உள்ளே இனிமை மிக்க பூரணம். இது ஞானத்தை அடையாளப்படுத்தும்.

விநாயகர் என்றாலே "இவருக்கு உயர்வான தலைவர் வேறு யாரும் இல்லை" என்பதாகும். தாயாக, தந்தையாக, ஞானகுருவாக, தந்தத்தால் பாரதம் எழுதிய முதல்வனாக, எளிமையின் விளக்கமாக அருளமுதை அன்பர்க்கு அளவின்றி வழங்கும் தும்பிக்கை ஆழ்வாராக விளங்குகின்ற விநாயகரைத் தொழுவோம். இருவினையகல திருவடி பணிவோம்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**



# கோயிலுக்கு ஒரு கோமாதா

**திருவேங்கடமுடையானின் அவதார வரலாற்றிலும் கூட, பசுதான் முதலில் தரிசித்து சீனிவாசனே கோவிந்தன் என்பதையும் நமக்குக் காட்டியருளியது. புற்றிலே வீற்று இருந்த எம்பெருமானுக்கு தன் மடியிலிருந்த அமிர்தமான பாலைத் தானாகவே சுறந்து இறைவனின் பசியைப் போக்கியது. மனிதன் உயிருடன் இருக்கும் பொழுது அவனுக்கு ஐச்வர்யம் அளிக்கும் பசுவை "கோதானம்" செய்வதன் மூலம் அவன் இறந்த பின்னும் உத்தம லோகத்தில் அவனைச் சேர்க்கின்றது.**

**காலையில் எழுந்தவுடன் ஒவ்வொருவரும் பசுமாட்டை தொழும் கலாச்சாரம் நம் பாரத தேசத்தில் உள்ளது. ஆனால் இன்றைய இயந்திர உலகில் நகர மயமாக்களின் காரணமாக பசுக்களை பராமரிப்பது மிகவும் அரிதான ஒன்றாக இருக்கின்றது. இதற்காக தி.தி.தேவஸ்தானம் மேற்கொண்டுள்ள "குடிக்கோ கோமாதா" அதாவது "கோயிலுக்கு ஒரு கோமாதா" திட்டம் வாயிலாக ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு பசுவும், அதன் கன்றும் அளிப்பதன் மூலம் அங்கு கோ பூஜை நாள்தோறும் நடைபெறுகிறது. அதனால் மக்கள் பண்டைய நடைமுறையைத் தமக்கு விருப்பமான நாட்களில் செய்து கொள்ள தி.தி.தே. வழிவகுத்து கொடுத்துள்ளது. இதனால் பசுவின் பாலும், தயிரும் கொண்டு பிரசாதம் செய்து அந்தந்தக் கோயில்களில் நைவேத்தியம் படைக்க உதவும். அதுமட்டுமல்லாமல் பசுவின் கோமியமும், சாணமும் உரமாகத் தோட்டத்திற்கு பயன்படுத்துவதன் மூலம் அந்த இடத்தையே இயற்கை வளமிக்கதாக மாற்ற முடிகிறது.**

**நமது இந்து சம்பிரதாயத்திலும், தர்ம சாஸ்திரங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும் பசுவை மேன்மையானதாகக் கூறப்பட்டுள்ளது. கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி, அதனோடு கன்றுடன் பசுவை வணங்குவதால் அனைத்துத் தேவதைகளும் வணங்கிய புண்ணியமும், அனைத்துச் செல்வங்களும் கிடைக்கப் பெறுவோம்.**

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -98

**இடமிருந்து வலம்**

1. பூமிக்கு கீழ் கருடன் சன்னதியும். பூமிக்கு மிக உயர்ந்த இடத்தில் ஆதிசேஷன் சன்னதியும் உள்ள திருத்தலம்...(9)
4. வாமனராக அவதரித்தவர் ....(5)
5. லட்சுமியும், நரசிம்மரும் தழுவிய படி இருக்கும் திருத்தலம்.....(5)
6. வரலட்சுமி பூஜை செய்து சாபம் நீங்கப் பெற்றவர்....(6)
8. லட்சுமியால் சாந்தம் பெற்ற திருமால் அவதாரம்....(6)
13. படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே என்றவர்....(8)
16. திருமலையில் அமைந்துள்ள தீர்த்தங்களில் ஒன்று....(8)

**வலமிருந்து இடம்**

9) ஏழு மோட்சபுரிகளில் ஒன்று...(3)
11) பஞ்ச தருக்களில் ஒன்று...(5)
18) கானகத்தில் இராமன், சீதையை வரவேற்றவர்.....(9)
19) சூரியனின் தாய் பெயர்....(3)
20) கருடாழ்வார் சர்ப்பத்துடனும், அம்ருத கலசத்துடனும் காட்சி அளிக்கும் தலம்....(7)

**மேலிருந்து கீழ்**

2) குரு பகவான் எந்த ராசிக்குச் செல் கிறாரோ அந்த ராசிக்குரிய நதியில் 12 நாட்கள் நீராடும் விழா....(7)
3. திருமாலின் வில்லின் அம்சமாகத் திகழ்பவர்...(9)

**கீழிருந்து மேல்**

7) தமிழ்நாட்டில் பாண்டவர்கள் தனித்தனியாக லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்த தலம்....(4)
10) உடல், உள்ளத்திற்கு வலிமை தரும் லட்சுமி.....(7)
12) லட்சுமணனின் மனைவி ....(4)

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | | | 3 |
| | | 4 | | | | | | | | | |
| | | 5 | | | | | | | | | |
| | | 6 | | | | | | 7 | | | |
| | | 8 | | | | | | | | | |
| | | | | | | | | 9 | | | |
| | | | | | | | | | 10 | | |
| | | | | | | | | | | 11 | |
| | | | 12 | 13 | | | | | | 14 | |
| | 15 | 16 | | | | | | | | | |
| 17 | | | | | | | | | | 18 | |
| | | 19 | | | | | | | | | 20 |

தொகுப்பு : திரு.எஸ்.ராஜகுமார், சென்னை,

புதிருக்கு விடை அறிய 39ஆம் பக்கம் பார்க்கவும்...

13) பலராமர் அவதாரம் ....(4) கிரகத்திற்கு அதிபதி
14) தசாவதாரத்தில் ஐந்தாவது அவதாரம்...(7)
15) பூரி ஜெகந்நாதர் சிலையைச் செதுக்கியவர்...(6)
16) தேவர் வடிவம் பூண்டு தேவர்கள் வரிசையில் அமர்ந்த அசுரர் ....(5)
17) திருவேங்கடவன் குபேரனிடம் கடன் வாங்கிய நாள்....(9)

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

திருமலையில் திருமுடிக்காணிக்கையைச் செலுத்துவது பாரம்பரியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நேர்த்தி கடனாகும். திருமலையில் தலைமுடிக் காணிக்கைச் செலுத்து வதற்கு எவ்விதமான கட்டணத்தையும் தி.தி.தே. பெறுவதில்லை. ஆகையால் பக்தர்கள் தலைமுடிக் காணிக்கையைச் செலுத்தும் போது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ஃப்ரீ எண். **1800-425-4141** க்குத் தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

## விபூதி பாதம்

விபூதி பாதத்தில் யோக ஐசுவரிய சித்திகளைப் பற்றி கூறுயிருக்கிறார்கள். உள் அங்கங்கள் மூலமாக அதாவது தாரணா, தியான, சமாதி இந்த மூன்றும் சேர்ந்து இலக்கில் கட்டுப்படும்போது யோக சித்திகள் முன்னால் தோன்றும். அதனால் விபூதி பாதத்தில் இந்த மூன்றையும் விசேஷமாக வலியுறுத்தி இருக்கிறார்கள்.

**சூத்திரம் 1 :** *“தேசபந்தஷ்சித்தஸ்ய தாரணா”*

நாபியில் – மணிபூரக சக்கரம், இதயகமலம் போன்றவை உள் இடங்கள். ஆகாயம், சூரியன், சந்திரன் இஷ்ட தெய்வம்/ தெய்வத்தின் மூர்த்தி அல்லது பஞ்ச பூதங்களில் ஒன்று. இவை வெளிப்பிரதேசங்கள். இவற்றில் ஏதாவது ஓர் இடத்தில் அல்லது ஒரு பொருளில் உள் மனதில் நிலை நிறுத்தும் போது அதை “தாரணா” என்று குறிப்பிடுகிறார்கள்.

**சூத்திரம் 2 :** *“தத்ர ப்ரத்யயைகதானதா த்யானம்”*

இலக்கில் நிலைநிறுத்தப்பட்ட சித்தம் அதில் இடைவிடாது பிரவாகமாக ஒன்றிய நிலை வரும் போது அதை தியானம் என்பர். அதில் நடுவில் வேறு எந்தச் சலனமும், சிந்தனையும் இருக்காது.

**சூத்திரம் 3 :** *“ததேவார்த்தமாத்ர நிர்பாஸம் ஸ்வரூபசூன்யமிவ ஸமாதி: ”*

தியானம் தொடர்ந்து செய்தால், சித்தம் தன்னை மறந்து இலக்கில் கலந்து விடும். அதாவது இலக்கின் உணர்வு மட்டும் தான் இருக்கும். அச்சமயம் தியானம் சமாதியாக மாறுகிறது. சமாதியில் சித்தம் இலக்கில் இரண்டறக் கலந்து விடுகிறது.

**சூத்திரம் 4 :** *“த்ரயமேகத்ர ஸஞ்யமம்”*

தியானிக்கப்படும் ஒரே இலக்கில் தாரணா, தியானம், சமாதி – மூன்றும் கட்டுப்பட்டு பதிந்து விட்டால் அதை சஞ்யமம் என்று யோகத்தில் கூறுகிறார்கள். இனி வரப்போகும் சூத்திர விளக்கங்களில் எந்த இலக்கை வசப்படுத்த சொல்லியிருக்கிறதோ அதில், தாரணா, தியானம், சமாதி ஆகிய மூன்றையும் சேர்த்து பதிய வைத்து விட்டால் சித்திகள் கிடைத்து விடும் என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 5 :** *“தஜ்ஜயாத் ப்ரக்ஞா லோக:”*

தியானப் பயிற்சியைத் தொடர்ந்து, அதன் பலனாக சஞ்யமத்தில் வெற்றி பெற்று விடுவான். அதாவது எந்த வஸ்துவை நினைத்து அதில் சித்தத்தை நிலை நிறுத்த நினைக்கிறானோ உடனே அந்த ஒன்றிய நிலை பெற்று விடுவான். அந்தச் சூழ்நிலை தியானத்தில் அந்த இலக்கை தன் வசப்படுத்தி விடுவான்.

**சூத்திரம் 6 :** *“தஸ்ய பூமிஷு வினியோக:”*

மேற்சொன்ன சஞ்யமம் சித்தி ஆனவுடன் ஸ்தூல வஸ்துவை இலக்காகக் கொண்டு முதலில் சஞ்யமம் செய்ய வேண்டும். அதாவது தியானத்தில் பிடிக்க வேண்டும். தூல விஷயங்களில் ஸ்திரமானவுடன் கிரமமாக சூட்சும விஷயங்களை சஞ்யமம் செய்ய வேண்டும். படிப்படியாக அந்தந்த இடங்களில் அல்லது பொருளில் சஞ்யமம் செய்து கொண்டே முன்னேற வேண்டும்.

**சூத்திரம் 7 :** *“த்ரய மந்தரங்கம் பூர்வேப்ய:”*

இதற்கு முன் இரண்டாவது பாதத்தில் கூறப்பட்ட யோகத்தின் எட்டு அங்கங்களில் முதல் ஐந்து வெளி அங்கங்களை (யமம்,

நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம்) பயிற்சி செய்த பின் தாரணா, தியானம், சமாதி என்ற உள் அங்கங்களை பயிற்சி செய்ய வேண்டும். யோகத்தில் இவை மூன்றும் சித்திகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன.

**சூத்திரம் 8 :** *''ததபி பஹிரங்கம் நிர்பீஜய்ய''*

இறுதிக் கட்ட சமாதியில் சித்தத்தின் அனைத்து இயல்புகளும் (சம்ஸ்காரங்களும்) நிறுத்தப்படும் போது தியானிக்கப்படும் இலக்கு மறைந்த பின் ஆத்ம சொரூபம் மட்டும் மிஞ்சுகிறது. அதனால் இறுதி சமாதியான நிர்பீஜசமாதி (அசம் பிரக்ஞாத சமாதி) வந்தபின் மேற்சொன்ன உள் அங்க விஷயங்களும் (தாரணா, தியான, சமாதி மூன்றும்) தேவை இல்லாமல் போகின்றன. ஏனெனில் அதில் ஓர் இலக்கில் சித்தத்தை பதிய வைக்கப்படுவதில்லை.

**சூத்திரம் 9 :** *''ததபி பஹிரங்கம் நிர்பீஜய்ய''*

இறுதிக்கட்ட சமாதிக்குமுன் சித்தத்தின் அனைத்துச் சலனங்களும் நின்றுவிட்ட போதிலும் சித்தத்தின் அடித்தளத்தில் நினைவுகள் தேங்கி நிற்கும். அதாவது அந்த நினைப்பின் இயல்பு மறையாமல் இருக்கும். அக்காலக்கட்டத்தில் நினைவுச் சலனங்கள் எழுவதும், அடங்குவதுமாக இருக்கும். சித்தத்தின் நினைவுகளை அடக்கும் இயல்பு இருந்து கொண்டிருக்கும். அதாவது நினைவலைகள் எழுந்தவுடன் அவற்றை அடக்கும் இயல்பு தொடர்ந்து கொண்டிருந்து இறுதியில் சித்தத்தில் நிறுத்தப்படும் இயல்பாக மாறிவிடும். இதை நிரோத பரிணாமம் என்பர்.

*தொடரும்....*

# தசாவதாரப் பெருமாள்!

**மூன்றாம் அவதாரம் கோல வராஹம். இரணியனின் தம்பி இரண்யாட்சன் பூமியைக் கடலில் அழுத்திய குற்றத்துக்காக திருமால் "ஏனத்தின் உருவாகி அவ்வரக்கனைக் கொன்று – நிலமங்கை எழில் கொண்டான்" பாரகம் கீண்ட பன்றியுருவில் ஞானத்தின் ஒளியுருவுமாகி நல்லுபதேசமும் செய்தான். இந்த "ஞானப்பிரானை அல்லால் இல்லை நான் கண்ட நல்லது" என்று போற்றினார் நம்மாழ்வார்.**

*''கோல மலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ!*
*நீலவரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்த தொப்ப*
*கோல வராகம் ஒன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்!*
*நீலக்கடல் கடைந்தாய்! உன்னைப் பெற்று இனிப் போக்குவனோ?''*

**என்று அவன் கோல வடிவழகில் ஈடுபட்டுச் சிக்கெனப் பிடித்தார் நம்மாழ்வார். கேழலாகி நின்ற அவ்வுருவின் எழிலை, கலியன் ஒலிமாலையிலும் ஒரு சில வரிகளில் காணலாம்.**

*''சிலம்பினிடைச் சிறுபரல் போல் பெரிய மேரு*
*திருக்குளம்பில் கணகணப்ப திருவாகாரம்*
*குலுங்க, நிலமடந்தை இடந்து புல்கிக்*
*கோட்டிடை வைத்தருளிய எங்கோமான் கண்டீர்''*

**என்கிறார். இதுவும் ஒரு வகை கடல்கோளே. நில இழப்பை ஈடுகட்டிய அருஞ்செயலே, திருமால் மண்ணகம் காத்த பெருமை இது!**



## பாசுரம் கண்ட பன்றி

## வராஹப் பெருமாள்

**நன்றி**
**பகவத் விஷய கட்டுரைகள்**
**(பாகம்-1)**

## திருமலையின் இயற்கையைக் காத்திடுவோம்

திருமலை ஏழு மலைகளின் கூட்டம். அந்த எழில் கொஞ்சும் மலைகளைப் பற்றி ஆழ்வார்கள், ஆசாரியர்கள், இசை ஞானிகள் தங்களுடைய பாசுரங்களில், கீர்த்தனைகளில் பாடியுள்ளனர். *“வீங்கு நீர் அருவி வேங்கடம்”* என்று சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்ட திருமலையை நாம் நம் அடுத்த சந்ததியினருக்கு நாம் கண்டு இன்புற்ற வண்ணமே அளித்திட வேண்டும். அதற்கு பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகள் போன்றவற்றை திருமலையிலும், மலைவழிச்சாலைகளிலும் ஆங்காங்கே வீசி எறியாமல் இருக்க வேண்டும். இதனால் இயற்கை மட்டுமின்றி இயற்கையை வளர்த்திடும் பல்லுயிர்களும் வாழ்ந்திடும். திருவேங்கடவன் குடி கொண்டிருக்கும் இத்திருமலையின் இயற்கை எழிலை நாமும் காத்து நம் சந்ததிகளுக்கும் வழங்கிடுவோம்!

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஜ்வாலா ராவப்ரணஷ்டா ஸுரநிவஹ மஹாஸ்ரீரதாங்காப்ஜ ஹஸ்தம்
ஸ்ரீரங்கே சிந்திதார்த்தாந் நிஜஜந விஷயே யோக்துகாமம் ததர்ஹாந்
த்ரஷ்டும் த்ருஷ்ட்யா ஸமந்தாஜ் ஜகதி வ்ருஷகிரேஸ்துங்க ச்ருங்காதிரூடம்
துஷ்டாதுஷ்டாந வந்தம் நிருபதி க்ருபயா ஸ்ரீநிவாஸம் பஜேந்த:

### பதவுரை

ஜ்வாலா – சுடராலே (ஜ்வாலையாலே), ஆராவ – கோஷத்தாலே, ப்ரணஷ்ட – முழுவதுமாக நலிந்த, அஸுரநிவஹ–அசுரக் கூட்டத்தையுடைய, மஹா– பெருமை வாய்ந்த, ரதாங்க– ஸ்ரீஸுதர்சநாழ்வானை, அப்ஜ – பாஞ்சஜந்யத்தை, ஹஸ்தம் – திருக்கைகளில் (ஏந்தியவனாய்), நிஜஜந விஷயே – தன்னுடைய பக்தர்கள் விஷயத்தில், ஸ்ரீரங்கே – ஸ்ரீரங்கத்தில், சிந்தித அர்த்தான் – சிந்தை செய்த விஷயத்தை, ததர்ஹாந் – அவருக்குத் தகுந்தாற்போல், யோக்து காமம் – பெற வேண்டுபவனாய், த்ருஷ்ட்யா – கண்பார்வையாலே, ஜகதி – உலகில், ஸமந்தாத் – அனைத்தும், த்ருஷ்டும் – பார்ப் பதற்கு, வ்ருஷ கிரே: – வேங்கடமலையையுடைய, துங்க – உயர்ந்ததான, ஸ்ரீரங்க அதிருடம் – உச்சியில் எழுந்தருளியிருக்கிறவன், துஷ்ட அதுஷ்ட – தீயவர் களையும், நல்லவர்களையும் (கூட), நிருபதிக்ருபயா – ஒரு காரணமுமில்லாத அருளால், அவந்தம் – ரக்ஷிக்கப் படுகின்றவனான, தம் – அந்த, ஸ்ரீநிவாஸம் – ஸ்ரீநிவாஸனுடைய, அந்த: – மனதில், பஜே – துதிக்கிறேன்.

### விரிவுரை

“தமஸ: பரமோதாதா ஸங்கசக்ர” என்றும், “வலத் துறையும் சுடராழியும்” என்றும், “படையோர்புக்கு முழங்கும் அப்பாஞ்ச சன்னியமும்” என்றும் சொல்லுகிறபடியே திருவேங்கடமுடையான் வலது திருக்கையில் ஸ்ரீஸுதர்சநாழ்வானையும், இடது திருக்கையில் ஸ்ரீபாஞ்சஜன்யத்தையும் தாங்கி இருக்கிறான். ஸ்ரீஸுதர்சநாழ்வான்



தன்னுடைய சுடராலே (ஜ்வாலை)யும், ஸ்ரீபாஞ்சஜன்யம் தன்னுடைய கோஷத்தாலேயும் அநபிபவநீயனாய் (விச்வாஸமற்ற) அசுர வர்க்கத்தை நலியச் செய்தார்.

*ஸ்புரத்ஸஹஸ்ரார சிகாதி தீவ்ரம்*
*ஸூதர்ஸநம் பாஸ்கர கோடி துல்யம்*
*ஸூரத்விஷாம் ப்ராண விநாசி விஷ்ணோ:*
*சக்ரம் ஸதாஹம் சரணம் ப்ரபத்யே*

என்றும் "யஸ்யநாதேந தைத்யாநாம் பலஹாநி: அஜாயத" என்றும் புகழப்படுகின்றனர். ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய பக்தர்களை அநுக்ரஹிக்க நினைத்து திருவேங்கட மலையில் ஸ்ரீநிவாஸனாய் "நின்ற திருவேங்கடம்" என்னுமா போலே நின்று கொண்டு அருள்புரிகின்றான். எம்பெருமான் உலகமனைத்தையும் நாலாபுறமும் பார்த்தவனாய் உயரமான திருவேங்கடமலையினுச்சியை அடைந்தவனானான்.

தீயவர்கள், நல்லவர்கள் என்னும் பாகுபாடில்லாமல் எல்லாரையும் தனக்கே உரித்தான நிர்ஹேதுகக்ருபையினால் ரக்ஷிக்கிறான் என்பது கருத்து. "வெறிதே அருள் செய்வர்" என்பதற் கிணங்க தீயவர்கள் என்கிற வேறுபாடில்லாமல் இருப்பதால்தான் உலகமனைத்தும் ரக்ஷிக்க முடிகிறது என்பதாம். "ஜ்வாலாராவே" முதலியன பண்புத் தொழில் வந்த அன்மொழித்தொகையாகும்.

*அந்த: காந்தச்ச்ரயோ ந ஸ்ஸ*
*கருணவிலஸத் த்ருக்தரங்கை ரபாங்கை:*
*ஸிஞ்சந்முஞ்சந் க்ருபாம்ப: கணகண*
*பரிதாந் ப்ரேம பூராநபராதாந்*
*ரூபம் சாபாதசூடம் விசதமுபநயந்*
*பங்கஜாக்ஷம் ஸமக்ஷம்*
*தத்தாம் ஹ்ருத்தாப சாந்தாய*
*சிசிரம்ருதுல தாநிர்ஜிதாப்ஜே பதாப்ஜே*

**பதவுரை**

ஸகருணவிலஸத் த்ருக்தரங்கை – கருணையோடு சேர்ந்ததனால் ஒளிவிடும் கண்ணிலிருந்து உண்டான அலைகளையுடைய, அபாங்கை: – கடைக்கண் பார்வையாலே, ஸிஞ்சந் – தொடுபவனாய், க்ருபா – அருள் என்னும், அம்ப: – நீரையுடைய, கண – அணுவான, கண – ஸமூகங்களோடு, பரிதாந் – நிறைந்த, அபாராந் – முடிவில்லாததான, ப்ரேமபூராந் – அன்பு (அனுராக) வெள்ளங்களை, முஞ்சந் – விட்டவனாய், பங்கஜாக்ஷம் ரூபம்ச – புண்டரீக்ஷனான வடிவத்தை (திவ்ய மங்கள விக்ரகத்தை), ஆபாதசூடம் – திருவடியிலிருந்து கிரீடம் வரை, ஸமக்ஷம் – கண்ணிற்கு எதிராக, விசதம் – நன்றாக, உபநயந் – இருப்பவனான, ச்ரிய:காந்த: – ஸ்ரீநிவாஸன், சிசிரம்ருதுல தாநிர்ஜிதாப்ஜே – குளிர்ந்த தன்மையில் ஸுகுமாரத்தை வெற்றி கொண்ட தாமரையையுடைய, பத அப்ஜே – திருவடித்தாமரையை, ஹ்ருத் தாபசாந்த்யை – (நம்முடைய) மனத்தில் எழும் தாபத்தைத் தணிப்பதற்கு, ந: அந்த: – நம்முடைய மனத்தின் உள்ளே, தத்தாம் – நிறுத்தி (வைப்பாயாக) – அநுக்ரஹிப்பாயாக.

– டாக்டர் கே.கே. ஏ.ரங்கராஜன், திருப்பதி, 9985599669.

தொடரும்....





தி.தி.தேவஸ்தானம் பசுக்களை பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை"யை நிறுவி அதற்கு பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான நல்வாய்ப்பினையும் ஏற்படுத்தி உள்ளது.

நன்கொடை ரூ.1,000/–க்கு குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. அஞ்சல், திருப்பதி–517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா அறக் கட்டளைக்கு வழங்கும் நன்கொடைகளுக்கு, வருமான வரி விலக்கும் உண்டு.



மாத்ருஸ்ரீ தரிகொண்ட
வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

சென்ற இதழின் தொடர்ச்சி...

ஸ்ரீ ஹரி பிரம்மோத்ஸவம் நடத்திட சம்மதம் தெரிவித்தவுடன் அதோடு நின்று விடாமல் மேற் கொண்டு நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளுக்கு பிரம்மா அனைவரையும் துரிதப்படுத்தினார். உடனே விகநசரை அழைத்து வைகானச முறைப்படி ரதோத்ஸவத்திற்கு நல்ல நாளை குறித்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். விகநசரும் பஞ்சாங்கத்தைத் துல்லியமாக ஆராய்ந்தார்.

சதுர்முகனே! கன்னி ராசியில் சூரியன் பிரவேசிக்கும் மாதத்தில் சித்தா நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் சாஸ்திர முறைப்படி துவஜா ரோஹணம் செய்தல் வேண்டும். உத்தராஸாடத்தில் ரதோத்ஸவம் நடத்தலாம்.

திருவோண நட்சத்திரத்தில் தீர்த்தவாரி என்றவுடன் பிரம்மா தேசாதிபதிகள் எல்லோருக்கும் தூதர்கள் வாயிலாக செய்தியை அனுப்பி வைத்தார். பிரம்ம தேவனின் அழைப்பிற்கிணங்க திராவிட, கர்னாடக, குரு, குருரம், கேகயம், கோசலம் முதலான தேசாதிபதிகள் நால்வகைப் படைகள் சூழ குடும்ப சமேதமாக சேஷாத்ரிக்கு பயணம் ஆனார்கள்.

சேஷாத்ரியை நோக்கி வருகின்ற சாதாரண மக்கள் யாவருக்கும் பயன் அளிக்கும் வகையில் வழிநெடுகிலும் அன்னச்சத்திரங்களும், நீர்ப்பந்தல்களும் அமைத்தனர். தம்தம் செல்வ வளங்களுக்குத் தகுந்தாற்போல் தானங்கள் செய்தார்கள். அதுமட்டுமின்றி எல்லோரும் "கோவிந்தா...கோவிந்தா..." என்ற திருநாமத்தைச் சொல்லியபடியே வேங்கடாசலத்தை வந்தடைந்தார்கள்.

மலைமீது உள்ள விடுதிகளில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு புஷ்கரணியில் நீராடி, பின்பு வராஹ ஸ்வாமியைத் தரிசனம் செய்து, காணிக்கைகள் செலுத்தி, அதன் பிறகு ஸ்ரீநிவாசனை தரிசனம் செய்து ஸ்வாமிக்கு பொன்னும் பொருளும் சமர்ப்பித்தார்கள்.

பிரம்மோத்ஸவம் மலை எங்கும் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்க, பிரம்மா விஷ்வக் சேனரைப் பார்த்து, சேனாதிபதியே! என் தந்தைக்கு மஹோத்ஸவம் நடத்த வேண்டும் என்ற என் விருப்பம் நிறைவேற உள்ளது. எனவே அதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திடுங்கள் என கட்டளை இட்டார்.

விஷ்வக்சேஷனர் பிரம்மா கட்டளைக்கு இணங்க, தனது பரிவாரங்களை அழைத்து அவரவர்களுக்கான பணிகளை ஒதுக்கி, அனைத்தும் தயார் நிலையில் உள்ளதை பிரம்மாவிற்குத் தெரிவித்தார்.

அதேபோல் விகநச மஹரிஷி விழாவிற்குத் தேவை யான வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந் தார். மேலும், ஹஸ்த நட்சத்திரம் கூடிய சுபவேளையில் அங்குரார்ப்பணம், நைவேத்தியங்கள் முதலானவை களைச் செய்து முடித்தார். மறுநாள் வாஸ்து ஹோமம், கருட பிரதிஷ்டை, கருட ஹோமம், கங்கணதாரணம் முதலான வைதீக காரியங்கள் அனைத்தும் சாஸ்திர முறைப்படி செய்து முடித்தார்.

ஹரிக்கும், ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவிகளுக்கும் புதிய ஆடை ஆபரணங்களைக் கொண்டு அலங்கரித்தார். இரத்தினங்கள் பதித்த தங்க ஆபரணங்களையும் சாத்தி, அழகான பல்லக்கில் இருக்கச் செய்தார். மங்கல வாத்தியங்கள் முழங்க, திக்பலி எங்கும் தெளிக்க, துவஜ படம், மேலும், சுதர்ஸன சக்கரம், சேனாதிபதி முன்னே நடந்து கொண்டிருக்க, சனகாதி முனிகள் போற்றிப் பாட, தேவாதி தேவர்களோடு திருவீதியில் உலா வருவதற்கு ஆயத்தப்படுத்தினர். பிரம்ம தேவன் ஸ்ரீபூ நீளா தேவியுடனான ஹரியை ஆனந்த விஷ்வக்சேனர் சாஸ்திர சாம்பிரதாய முறைப்படி துவஜா ரோஹணம் செய்வித்தார். அன்று இரவு நவ கலசங்களை வைத்து, எட்டு திக்பாலகர்களையும் ஆவாஹனம் செய்வித்து, பவித்திர வேள்வியை வளர்த்தார். சகல தேவதைகளுக்குமான ஹோமங்களை செய்தார்.

நட்சத்திரங்களுக்கான ஹோமங்கள் தொடர்ந்து செய்தார். திவ்விய சக்கரத்திற்கு திக்பாலகரால் திருச்சுற்று செய்வித்தார்கள். பேரி முதலான வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்க, முன்பாக பிரம்மரதம் சென்று கொண்டிருக்க, ஸ்வாமி சேஷ வாகனத்தின் மேல் ஸ்ரீநிவாசனாக, பிரதக்ஷிணம் செய்வித்து, பிரம்மா ஹரியை அவருடைய இருப்பிடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தார்.

இவ்வாறாகவே நவகலசத்திற்கும் நைவேத்திய ஹோமம் சக்ரபலி போன்றவற்றை எப்போதும் போல சாஸ்திர முறைப்படி செய்வித்து சிறிய சேஷ வாகனத்தின் மேல் மறுநாள் உதயம் திருவீதி உலா நடைபெறச் செய்தார். அன்று இரவு மலர்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஹம்ச வாகனம், மூன்றாம் நாள் காலை சிம்ம வாகனம், இரவு முத்துக்களாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட விமான வாகனம். நான்காம் நாள் காலை சர்வ பூபால வாகனம், இரவு கல்பவிருக்ஷ வாகனம், ஐந்தாம் நாள் காலை மோகினி வேஷ தாரியாக இருக்கின்ற ஹரிக்கு பல்லக்குச் சேவை, அன்று இரவு கருடோத்ஸவம்.

ஆறாம் நாள் காலை அனுமன் வாகனம், மாலை வசந்தோத்ஸவத்திற்குப் பிறகு ஐராவத உத்ஸவமும், ஏழாம் நாள் காலை சூரியப் பிரபை வாகனம், இரவு சந்திரப் பிரபை வாகனம், எட்டாம் நாள் காலை தங்க மலைபோல் காட்சியளிக்கும் தேர் மீது ஸ்ரீதேவி பூதேவி நீளா தேவியுடன் ஹரியைத் தேர்மீது இருக்கச் செய்து, பிரம்மா அலங்கரிக்கப்பட்ட தேரின் முன்னே செல்ல, திக்பாலகர்கள், தேவகணங்கள் சேவித்துக் கொண்டிருக்க, ரம்பாதிகள் தேர் மீது பாரிஜாத பூக்களை அள்ளித் தூவ, நாட்டியங்கள் நடந்தேறக் கண் கொள்ளக் காட்சியாகத் தேர்த் திருவிழா நடைப்பெற்றது.

**தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே. சர்வோத்தம ராவ்.**
**தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.**

*பெருமை அறிவோம்...*

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 98க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ச் | சி | று | 2 பு | லி | யூ | ர் | மி | | 3 தி |
| | | 4 ம | கா | வி | ஷ் | ணு | | லூ | சு | | ரு |
| யை | | 5 ப | ரி | க் | க | ல் | | ல் | ட் | ம் | ம |
| தி | | 6 சி | த் | தி | ர | நே | மி | 7 ந | ல | ர | ங் |
| ரு | மா | 8 ந | ர | சி | ம் | ம | ர் | | ய | தா | கை |
| தி | ர் | னு | ளா | ன் | வி | சி | ஞ் | 9 கா | ரி | வ | யா |
| த் | க | பா | மி | க | ழா | | | | 10 தை | னா | ழ் |
| ய | வ | ர் | ர் | ளி | | ம் | ர | தா | ந் | 11 ம | வா |
| ச | ஷ் | வ | 12 ஊ | 13 கு | ல | சே | க | ரா | ழ் | 14 வா | ர் |
| ட் | 15 வி | 16 ஸ் | வா | மி | பு | ஷ் | க | ர | ணி | | |
| 17 அ | | ர் | வ | னி | மு | ஜ | வா | த் | ர | 18 ப | |
| தி | தி | 19 அ | | | ல் | கா | ங் | த | த் | ரு | 20 தி |

# திருப்பரமேச்சுர விண்ணகரம்

## வைகுண்ட நாதர்

- உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

சனகாதி முனிவர்கள், பகவானைத் தரிசிக்க, வைகுண்டம் சென்றபோது வைகுந்த வாயிற் காவலரான ஜயவிஜயர் அவர்களைத் தடுத்ததால் முனிவர்கள் சாபமிட, அதனால் அவர்கள் இருவரும் இரணியன்–இரணியாட்சன், இராவணன்–கும்பகருணன், சிசுபாலன்–தந்த வக்த்ரன் என்று மூன்று பிறவிகளை அடைந்து எம்பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றனர் என்று பாகவத புராணம் கூறுகிறது.

ஆனால் அவர்கள் இருவரும், இத்திவ்ய தேசத்தில் அர்ச்சாவதாரத்தில் எம்பெருமானுக்குப் பணிகளைச் செய்யும் பேறுபெற்று, முக்தி பெற்றனர் என்று புராணம் கூறுகிறது. விதர்ப்ப நாட்டின் மன்னனான விரோசனன் என்பவன், தனது வாழ்வில் எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்தும், இன்றியமையாத மக்கட் செல்வத்தைப் (குழந்தைப் பேற்றை) பெறாமல், அக்குறை நீங்கும் வழியைப் பெரியோர்களிடம் வேண்ட "கயிலை மலைக்குச் சென்று சிவபிரானை வழிபட்டால் பிள்ளைப் பேறு கிடைக்கும்" என்று சொல்ல, கயிலை மலையை எவ்வாறு அடைவது? என்று மன்னன் கவலை அடைந்தபோது காஞ்சியில் உள்ள கைலாச நாதர் திருக்கோயிலைச் சென்று அடைந்தால் போதும் என்று பெரியோர் கூறினர்.

மன்னனும் காஞ்சிக் காமகோட்டத்தை அடைந்து, வழிபட்டு, அதன் விளைவாக, ஜயவிஜயர் என்ற இருவரும் பல்லவன் என்றும், வில்லவன் என்றும் மன்னனுக்கு இரண்டு மைந்தர்களாய்ப் பிறந்தனர் என்றும், அவர்கள் இருவரும் பிறந்தது முதலாகவே, திருமாலிடம் எல்லையில்லாத பக்தி கொண்டவர்களாய், அப்பெருமானின் அருளைப் பெறும் வகையில், புண்ணிய கோடி விமானத்து அருகில், அசுவமேத யாகத்தைச் செய்தனர் என்றும், அப்போது பகவான் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் அதே வடிவத்தில் அமர்ந்த நிலையில்அவர்கள் இருவருக்கும் சேவை சாதித்தார் என்றும், ஸ்ரீவைகுண்டத்து அருகில் அவர்கள் இருவரும் சேவித்து அதே நிலையில் அர்ச்சை வடிவில் பின்னானார் வணங்கும் சோதியாய், ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாளாகக் காட்சி அளிக்க வேண்டியதாகவும் சொல்லப்படுகிறது.

**சிறப்புகள் :**

இந்தத் திவ்ய தேசப் பாசுரங்கள் மன்னவரின் புகழைக் குறிப்பிடுவதாகவும் உள்ளன. வீரத்தில் சிறந்த திருமங்கை ஆழ்வார் மதிக்கும்படியான ஆண் பிள்ளைத் தனத்தை உடையவன் என்று ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை குறிப்பிடுகிறார். ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் எம்பெருமான் அர்ச்சை நிலையில் விளங்கினாலும், ஆழ்வார் இத்திவ்ய தேசத்தை "எந்தைபிரானது இடம்" என்று அழைக்கிறார்.

பல்லவவேந்தன் பரமேச்சுரவர்மன் பணியை, இத்தலத்தில் எம்பெருமான் ஏற்றுக் கொண்ட காரணத்தால் "பரமேச்சுர விண்ணகரம்" என்ற திருப்பெயரை இந்தத் திவ்ய தேசம் பெறுகிறது என்பர். "பரமேச்சுரன்" என்பதற்கு பரமபதநாதன் ஆகிய எம்பெருமான் என்றே ஸ்ரீ உ.வே. பிரதிவாதி பயங்கரம் சுவாமி கூறுகிறார்.



| | | |
|---|---|---|
| பெருமாள் | : | பரமபதநாதன், (மேற்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்) |
| தாயார் | : | வைகுண்டவல்லித்தாயார் (தனிக்கோயில் நாச்சியார்) |
| தீர்த்தம் | : | ஐரம்மத தீர்த்தம். |
| விமானம் | : | முகுந்த விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | பல்லவ மன்னன். |
| ஆகமம் | : | வைகானஸம். |
| மங்களாசாஸனம் | : | திருமங்கை ஆழ்வார். |

**விசேஷம் :**

இத்திருக்கோயில் விமானம் மூன்று அடுக்குகளாக அமைந்துள்ளது. முதல் அடுக்கான கீழ்த் தளத்தில் அமர்ந்த நிலையில், ஸ்ரீவைகுண்ட நாதப் பெருமாள் எழுந்தருளியுள்ளார்.

இரண்டாவது அடுக்கில் திருமகள், மண்மகள் என்ற இருவருடன், கிடந்த திருக்கோலத்தில் அரங்கநகர் செல்வனாகக் காட்சி அளிக்கிறார். அதற்கும் மேலே, மூன்றாவது அடுக்கில், நின்ற திருக்கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

இப்பெருமானுக்குத் திருப்பணி செய்த மாமன்னனைப் பற்றி, "பல்லவன், வில்லவன் என்று உலகில் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல் பல்லவர் கோன்" என்றும், அவன் திருக்கடல் மல்லையில் வாழ்பவர்க்குத் தலைவன் என்றும், தன் வில்லாற்றலால் போர்க்களத்தில் பாண்டியனை வென்றவன் என்றும், "மண்ணை" என்ற இடத்தில், பகைவர்களை, தனது வேற்படையால் அழித்தவன் என்றும், பாம்பைக் கொடியாகக் கொண்டவன் என்றும், காஞ்சியில் செங்கோல் செலுத்தியவன் என்றும், பாண்டியரைக் கருவூர்ப் போர்க் களத்தில் வென்றவன் என்றும், நென்மெலி என்ற இடத்தில் வில்லவன் என்ற அரசனை வென்றவன் என்றும், திருமங்கை மன்னன் என்ற அரசனை வென்றவன் என்றும், திருமங்கைமன்னன் போற்றுகிறார். பல்லவர்கள் பூஜித்த எம்பெருமான் பரமேச்சுர விண்ணகரம் என்று, இத்திவ்ய தேசம் பெயர் பெற்றிருப்பதால், பரமேச்சுரவர்மன் என்று பெயர் பெற்ற இரண்டாம் நந்தி வர்மப் பல்லவனாலேயே இப்பெயர் உண்டாகி இருக்கலாம்.

**த்யானச்லோகம் :**

*"யத்ரை ரம்மத தீர்த்தமத்புததமம் வைகுண்ட வல்லீ ரமா*
*ப்ரத்யக்திக் வதநோ முகுந்த கசரம் தத் பல்லவா பீஷ்டதம்*


**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**தானத்தில் சிறந்தது அன்னதானம்**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- கைக்குழந்தைகளுக்குத் தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. பால் தேவைப்படுபவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

*இறைவனின் சேவையில் பக்தர்கள்;*
*பக்தர்களின் சேவையில் தி.தி.தே.*

*யத்ராஸ்ந சயாந பாதக மநஸ் திஷ்டன்*
*அனேகா க்ருதிஸ்*
*தத்ரஶ்ரீ பரமேச்வராம் பரபுரே வைகுண்டநாத:*
*பர: ''*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்



## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம்

ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி வீற்றிருக்கும் நாராயணவனம் எனும் புண்ணிய தலம் திருப்பதியிலிருந்து சென்னை செல்லும் வழியில் 25 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தை 1967ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் கையகப்படுத்தி புதுப்பித்த னர். திருமலையில் பிரம்மோத்ஸவம் நடைபெறும் சமயத்தில் இவ்வாலயத்தில் ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச திருக்கல்யாணம் நடைபெறும். இவ் வாலயத்தில் வேதாந்த தேசிகரும் வீற்றிருக்கின்றார்.

ஸ்ரீமகாவிஷ்ணு வேதவதிக்கு அளித்த வாக்குறுதியின்படி, பூமியில் ஸ்ரீநிவாசனாக அவதரித்து நாராயணவனம் எனும் தலத்தில் ஆகாச ராஜாவின் மகளாக பத்மாவதியாக அவதரித்த வேதவதியைத் திருமணம் செய்து கொண்டதால் இந்த நாராயணவனம் எனும் தல மும் பவித்ர புண்ணிய தலமாக பெயர் பெற்றது.

இந்த ஆலயத்தின் தெற்கே ஆரணி நதிக்கரையில் அவநாக்ஷி அம்மன் ஆலயமும் அமைந்து உள்ளது. இந்த ஆலயத்தில் வீற்றி ருக்கும் தாயாரைத் தரிசித்த ஆதிசங்கரர் தாயா ரின் அருகில் தாமரைச் சக்கரத்தை பிரதிஷ்டை செய்துள்ளதை இன்றும் நாம் காணலாம்.



பாசுரம்

*கார் மன்னு நீள் விசும்பும் கடலும்*
*சுடரும் நிலனும் மலையும் தன் உந்தித்*
*தார் மன்னு தாமரைக் கண்ணனிடம்*
*தடமா மதிள் சூழ்ந்து அழகாய கச்சி*

*தேர் மன்னு தென்னவனை முனையில்*
*செருவில் திறல் வாட்டிய திண்சிலையோன்*
*பார்பன்னு பல்லவர்கோன் பணிந்த*
*பரமேச்சுரவிண்ணகரம் அதுவே*

– திருமங்கையாழ்வார்

*பதத்தமிழால் தன்னையே பாடுவித்து,*
*என்னைத்தன்*
*பதத்து அடியார்க்கே ஆட்படுத்தான் - இதத்த*
*பரமேச்சுர விண்ணகரான், பல ஆன்*
*வரமேச்சு, உரல் அணைந்தமால்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

*831. ஓம் ஸப்தஜிஹ்வ: நம:*

ஏழு நாக்குகளை உடைய அக்னியாக இருப்பவன்.

*ஓம் சதுரச்ரீ: நம:*

நினைத்ததை முடிக்கும் சாதுர்யம் உள்ளவள்.

*832. ஓம் ஸப்ததைதா: நம:*

ஏழு வைதீக கர்மாக்களால் பூஜிக்கப்படுபவன்.

*ஓம் மநோஜவா: நம:*

கார்யங்களை விரைவாக சாதித்துத் தருபவள்.

*833. ஓம் ஸப்த வாஹந: நம:*

ஏழு சந்தஸ்களை, ஏழு குதிரைகளை உடைய சூரியனை நடத்துபவன்.

*ஓம் பாலா: நம:*

தன் பெருமையைப் பறைசாற்றாதவள்.

*834. ஓம் அமூர்த்தி: நம:*

அப்ராக்ருத திவ்யமங்கள ஸ்வரூபன்.

*ஓம் குமாரீ: நம:*

குமரியாகத் தியானிப்பவர்கட்கு அவ்விதமே காட்சி தருபவள்.

### குறிப்பு :

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்திலிருந்து 600 மீட்டர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது

*திவ்யதேச வைபவம் வளரும்...*



# இராஜேந்திரச் சோழனின் வெற்றிச் சின்னம்

## கங்கை விநாயகர்

தஞ்சை மண்ணின் மைந்தனான எத்திசையும் புகழ் பரப்பும் வண்ணம் சுடர்மிகு சூரியனாக வலம் வந்து கங்கை வரை கடல் கடந்து கடாரமும் (இன்றைய மலேசியா) வென்றவன் மாமன்னன் இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் ஆவான். வீரத்தின் விளைநிலமான மாமன்னன் இராஜேந்திர சோழன் பல போர் முனைகளைச் சந்தித்து வெற்றி பல கண்டவன் என்பது வரலாறு.

அப்படி தாங்கள் வெற்றி பெறும் நாட்டில் இருந்து வெற்றியின் அடையாளமாக அப்பகுதியில் உள்ள தெய்வத் திருமேனிகளை எடுத்து வந்து தனது நாட்டில் வழிபடுவது சோழர்களின் மரபாகும்.

சோழ சாம்ராஜ்யத்தின் வரலாற்றுச் சுவடுகளில் வீரமும் கலை தாகமும் இறையின் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடும் இணைந்த வெற்றிச் சின்னமாக கும்பகோணம் கீழ்க்கோட்டம் அருள்மிகு நாகேஸ்வரர் ஆலயத்திலுள்ள கங்கை விநாயக சிற்ப வடிவமானது. தொடர் ஆண்டு 1025க்கு முற்பட்ட தற்போதைய வங்க தேசத்தைச் சோழர்களின் காலத்தில் ஆண்டவர்களான பாலர்கள் எனும் அரசு மரபினர் காலச் சிற்பியின் கலைமிகு படைப்பாகும்.

இவ்வகையில் கங்கைக்கரையிலிருந்து இராஜேந் திர சோழனின் தளபதிகள் எடுத்து வந்ததால் கங்கை கணபதி எனும் திருநாமத்துடன் அழைக்கப்படுகிறார்.

இக்கங்கை விநாயகர் வடிவம் ஒரே கல்லில் உருவான அழகிய சிற்பமாகும். இச்சிலையில் சிங்க முக திருவாச்சியும், அதில் சில கந்தர்வ ஆண்கள், பெண்கள் விநாயகப் பெருமானுக்கு மலர்களைத் தூவி மகிழும் திருக்காட்சி புடைப்புச் சிற்பங்களும், இருபுறமும் யானைகளின் தலை மட்டும் அமையப் பெற்று உள்ளது.

மேலும், மலர்ந்த தாமரையைப் பீடமாகக் கொண்டு வலக்கரம் ஒன்றில் உடைந்த தந்தத்தையும், மற்றொரு கரம் உருத்ராட்சை மாலையையும், இடக்கரம் ஒன்றில் இனிப்பு உருண்டைகள் நிறைந்த தட்டையும், மற்றொரு கரம் கதாயுதத்தையும், துதிக்கையில் கலசத்தைத் தாங்கி நாக பூநூல் அணிந்து நின்ற கோல சதுர் கரம் உடைய விநாயகர் ஆவார். இவரின் திருவடிகளில் இரு பூதகணங்கள் முக்கனிகளில் ஒன்றான பலாப்பழத்தை தலையில் சுமந்து நிற்கும் வடிவங்களும், அவரின் வாகனமான மூசிகம் அவரின் ஆணையை எதிர் நோக்கும் பார்வையுடன் காத்திருக் கும் வண்ணம் அமையப் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாகும்.

வெற்றி நாயகனான ஸ்ரீகங்கை விநாயகப் பெருமானை வணங்கி வழிபட நினைத்த நல்ல எண்ணங்கள் சித்தி ஆகும் என்பது ஐதீகம்.

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை, 8610819456.

சென்ற இதழின் தொடர்ச்சி



## அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமானுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

*சங்கர பாஸ்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம்*
*சாய்வுற வாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடு நாள்*
*வெங்கலி இங்கினி வீறு நமக்கிலை என்று மிதத்தளர் நாள்*
*மேதினி நஞ்சுமை ஆறுமெனத்துயர் விட்டு விளங்கிய நாள்*
*மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்*
*மன்னிய தென்னரங்காபுரி மாமலைமற்றும் உவந்திடு நாள்*
*செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்*
*சீமான் இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே.*

### பதவுரை

சங்கர – சங்கரன் மதம், பாஸ்கர – பாஸ்கரன் மதம், யாதவ – யாதவப்ரகாசன் மதம், பாட்ட – பாட்ட மதம், பிரபாகரர் தங்கள் மதம் – பிரபாகரன் மதம் இவையெல்லாம், சாய்வுற – அழிவை அடையாதிருக்கையில், வாதியர் – எடுத்துப் பேசுபவர்களான சங்கரன் முதலானவர்களும், மாய்குவர் என்று – வெற்றியின்றி அழிவார்கள் என்று, சதுமறை – நான்கு வேதங்களும், வாழ்ந்திடு நாள் – பொருள் நிறைவையுடையதாய் வளர்ச்சி அடையும் நாள். வெங்கலி – கொடிய கலியும், இங்கு இனி வீறு நமக்கிலை என்று – இவ்விடத்தில் இனி நமக்கு ஸாம்ராஜ்யம் இல்லை என்று, மிகத்தளர் நாள் – மிகவும் ஒழியும். எனத்துயர் விட்டு – துயர் தீர்ந்து, விளங்கிய நாள் – சோர்வடையும் நாளாகும். மேதினி – உமியும், நஞ்சுமை – நம் தலைச்சுமை, ஆறும் – பிரகாசிக்கிற நாளாகும். மங்கையராளி – திருமங்கை ஆழ்வாருடையவும், பராங்குச – நம்மாழ்வாருடையவும், முன்னவர் – பூர்வா சாரியர்களுடையவும், வாழ்வு – மகிழ்ச்சியாகிற செல்வம், முளைத்திடு நாள் – தலையெடுக்கும் நாளாகும். மன்னிய தென் அரங்காபுரி – அழகிய திருவரங்கமும், மாமலை – பெரிய திருமலையும், மற்றும் உவந்திடு நாள் – மற்றும் இருக்கும் திவ்ய தேசங்களும் மகிழ்ச்சியடையும் நாளாகும். செங்கயல் வாவிகள் சூழ் – சிவந்து அழகிய மீன்களையுடைய குளங்களால் சூழப்பட்ட, வயல் – விளைகின்ற வயல்களினாலே, நாளும் – நித்யாய் உண்டான, சிறந்த – நகர அலங்காரங்களையுடைய, பெரும்பூதி – ஸ்ரீபெரும்பூதூரை அவதார தலமாக உடைய, சீமான் இளையாழ்வார் – ஸ்ரீமானாய் இளையாழ்வார் என்ற பெயரை அடையாளமாக உடைய எம்பெருமானார், வந்தருளிய நாள் – வந்து அவதரித்த நாள், திருவாதிரை நாளே – திருவாதிரைத் திருநக்ஷத்ரமாகும். இதுவும் ஒரு நாளே!

### சிறப்புரை

(சங்கர பாஸ்கர யாதவ பாட்டப் பிரபாகரர் தங்கள் மதம் சாய்வுற வாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடு நாள்) – நம்பிள்ளை முதல் ஸ்ரீயப்பதிப்படியில்

**'உங்களுக்காக நாங்கள்'**

**உங்கள் ஆலோசனைகள்/தரிசனம், சேவைகளுக்கு தொடர்பு கொள்ள...**

**டோல் ப்ரீ எண்**

**1800-425-4141**

அருளியபடியே சங்கரமதமாவது – நிர்விசேஷ சிந்மாத்ரமே மாயாசபளமாய்க் கொண்டு பிரமிக்கை ஸம்ஸாரம் என்றும், "தத் த்வமஸி" என்று முதலான வாக்யத்தால் உண்டான அறிவாலே அந்த பிரமம் போவது மோக்ஷமாகும். பாஸ்கர மதமாவது – அந்த ப்ரஹ்மம் தானே உண்மையான அவித்யையினால் பிரமிக்கை ஸம்ஸாரம் என்றும், வர்ணாச்ரம தர்மத்தோடு கூடியதாய் வாக்யத்தால் உண்டான அறிவை முன்னிட்டுக்கொண்டு உபாஸனத்தை உள்ளடக்கிய அறிவாலே அவித்யை அழிகை மோக்ஷமாகும்.

யாதவப்ரகாச மதமானது – அந்த ப்ரஹ்மம் தானே உண்மையான அறிவில் பொருள், அறிவுள் பொருள், ஈச்வரன் உள்ளிட்டதாய்க் கொண்டு பிரமிக்கிறது. அதுக்கு உண்டான பேத அறிவு ஸம்ஸாரம் என்றும், ஜ்ஞான கர்ம ஸமுச்சயத்தினாலே பேத அறிவு போகை மோக்ஷம் ஆகும். பாட்ட பிரபாகரர்கள் மதமாவது நித்யராய், அநேகராய், எங்கும் எல்லாவிடத்திலும் பரவி இருப்பவராய் அநாதியான கர்மத்தாலே இவ்வுலக வாழ்வில் ஈடுபடுகிறார்கள் ஆத்மாக்கள். உலகம் ப்ரவாஹ ரூபத்தால் நித்யம், கர்மத்தால் உண்டாகும் அபூர்வம் என்ற பொருள் ஆத்ம ப்ராப்திரூபமான மோக்ஷத்துக்குக் காரணம் என்றும், ஈச்வரன் இருக்கிறான் என்பது இல்லை என்பர். இப்படி இரு பிரிவுகளான குத்ருஷ்டிகளாய்க் கொண்டு வேதத்துக்கு அவப்பொருளைக் கூறுபவர்கள் ஆகையாலே வைதீக தர்மம் தலைசாயும்படி வந்து கிட்டி இருக்கிற எடுத்துப் பேசுபவர்களான சங்கரர் முதலானோர் மதங்கள் அழியும் என்று நான்கு வகைப்பட்ட வேதமானது இராமாநுசர் அவதரித்ததால் பொருள் நிறைவைக் கொண்டு வளர்ந்த நாளாகும்.

(வெங்கலி இங்கு இனி வீறு நமக்கில்லை என்று மிகத்தளர் நாள்) கலிக்கு வெம்மையாவது வைதிக தர்மம் தலை சாய்ந்து வெளி மதங்கள் மேலிடுகைக்குக் காரணமானது. அதனை "கலியும் கெடும் கண்டுகொண்மின்" என்று நம்மாழ்வார் அருளியபடியே, கொடிய கலியானது இவ்விடத்தில் இனி நமக்கு ஸாம்ராஜ்யம் பண்ண சக்தி உடையோம் அன்று என்று அழிந்தது இராமாநுசர் அவதரிக்கையாலே. அப்படி மிகவும் நிலைகுலைந்து இருக்கப் பண்ணவல்லதான திருநக்ஷத்ரமாகும்.

தொடரும்....

## ஸப்தகிரி ஜூலை 2024 விடைகள்

1. ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி.
2. திருவரங்கத்து அமுதனார்.
3. முருகப் பெருமான்.
4. புறநானூறு.
5. வியாசர்.
6. வேங்கட சுப்ரமணியர்.
7. ஆளவந்தார்.
8. இராமாநுஜர்.
9. பட்டினத்தார்.
10. பெரியாழ்வார்.
11. பாரதியார்.
12. நித்திய தீர்த்தம்.
13. தக்ஷிணாமூர்த்தி.
14. யயாதி.
15. ஆனி மாதம், சுவாதி நட்சத்திரம்.






**போட்டி எண். 24**

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் எம். வேதாந்த், அடையார், சென்னை.
2. செல்வி. ஹரிசினிஸ்ரீ சேர்மன்.ராஜரத்தினம் தெரு, சேலம்.
3. செல்வி கிருத்திகா முத்தமிழ் நகர், சென்னை.



# செப்டம்பர் 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. பாக்கிகள் வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழிலில் வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் அலைச்சல் காரணமாக தூக்கம் குறையும். பொதுவாக தெய்வ பலம் பொருந்திய மாதமிது.

**ரிஷபம்**

வீடு, மனை, மின்சாதனப் பொருட்கள், வீட்டு உப கரணங்கள், புதுவாகனம் வாங்கும் யோகம் உண்டு. சகோதரரால் தனலாபம் உண்டு. தொழில் துறையில் அலைச்சலும், வேலைப்பளுவும் அதிகம் ஆகும்.மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கம் தீரும். தல யாத்திரையால் நற்பலனைப் பெறுவீர். மொத்தத்தில் முயற்சியில் வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்**

ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் மாற்றம் ஏற்படும்.பெற்றோரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.திருஷ்டியின் காரணமாக செயல்பாடுகளில் தடுமாற்றம் உண்டாகும். மிகவும் கடுமையாக உழைத்தால் மட்டுமே மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். புதுத்திட்டங்கள் போடும்போது எச்சரிக்கை தேவை. மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**கடகம்**

குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டு பின் சரியாகும். குடும்பத்தினர் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. உத்தியோகத்தில் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். மாணவர்கள் மிகுந்த முயற்சியால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். குழந்தைகளின் கல்விக்காகச் செலவினங்கள் அதிகமாகும். மிகவும் சிரமப்பட்டு முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

தொழில்துறையில் மாற்றமும், முன்னேற்றமும் உண்டு. கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு உருவாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். தங்கம், வெள்ளி நகைகள் வாங்கும் யோகம் உண்டு. தனது உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. உடன் பிறந்தோரால் நன்மையுண்டு. எல்லோரையும் அரவணைத்துச் சென்று வெற்றி தரும் மாதமிது.

**கன்னி**

சுபச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் துறையில் அலைச்சலும், விருத்தியும் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். பிரச்சனைகள் தீரும். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று புகழடைவார்கள். உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் தரும் யோகமான மாதமிது.

**துலாம்**

ஜாதக தோஷங்களுக்கு பரிகாரங்கள் செய்ய வேண்டிய மாதமிது. பூர்வீகச் சொத்துக்கள் குறித்து பேசாதீர். செலவினங்கள் அதிகமாகும். மனைவியால் தனலாபம் உண்டு. செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வயிறு உபாதை ஏற்படும். புது முயற்சிகள் இம்மாதம் தவிர்க்கவும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**விருச்சிகம்**

தொழில் வளர்ச்சியோடு அலைச்சலும் உண்டு. நண்பர்கள், உறவினர்களால் பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். குழந்தை பாக்கியம் கிட்டும். தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றி தரும். தெய்வ அருளுடன் முன்னேறும் மாதமிது.

**தனுசு**

தொழில் துறையில் போட்டி அதிகமானாலும் கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். இளைய சகோதரர் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெற்றோருக்கு நன்மையுண்டு. கணவன்-மனைவி பிரச்சனை தீரும். ஜாமீன் போடுவதைத் தவிர்க்கவும். பணியில் இடமாற்றம் உண்டு. மாணவர்களுக்கு முயற்சி திருவினை ஆக்கும். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதமிது.

**மகரம்**

பேச்சில் கவனம் தேவை. குழந்தைகள் கல்வி மேம்படும். உடல் உஷ்ணம் ஏற்படும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பெற்றோருக்கு நல்ல மருத்துவம் கிட்டும். தொழிலில் சிரமப்பட்டால் முன்னேறலாம். வேலைப்பளு அதிகமாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணப்புழக்கம் உண்டு. புதிய முயற்சிகளில் தெய்வ பலத்தால் வெற்றி பெறும் மாதமிது.

**கும்பம்**

தொழிலில் வேலைப்பளு அதிகம். மனைவியின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. விவாதங்களைத் தவிர்க்கவும். பெற்றோர் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். முயற்சி வெற்றி தரும். பூர்வீகச் சொத்துக்களில் தீர்வு கிட்டும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். மாதத்தின் பிற்பகுதியில் பிரயாண அலைச்சல் உண்டு. மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னேறும் மாதமிது.

**மீனம்**

வரவுக்கேற்ற செலவினங்கள் உண்டாகும். தொழிலில் எச்சரிக்கை தேவை. நண்பர்கள், உறவினர்கள் உதவுவர். சகோதரர்களுக்கு நன்மையுண்டு. உத்தியோகத்தில், தொழில், வேலைவாய்ப்புகளில் வெற்றி கிட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கடும் முயற்சியின் மூலம் வெற்றி பெறும் இனிய மாதமிது.



நீதிக்கதை

# தர்மம் செய்! அதையும் அன்றே செய்!!

திரு. அசோக்ராஜா, அரவகுறிச்சிப்பட்டி,
97503 33265.

மகாபாரத யுத்தத்தின் முடிவில் பாண்டவர்கள் வெற்றி பெற்று முழு பாரத கண்டத்தின் சக்ரவர்த்தியாக யுதிஷ்டிரர் முடிசூட்டப்பட்டார். அஸ்வமேத யாகத்தை பாண்டவர்கள் செய்தனர். தேவதைகளும், ரிஷிகளும், மனிதர்களும் யாகத்தின் பலனைப் பெற்று திருப்தி அடைந்தார்கள். தர்மம் முழு மகிமையுடன் பூமியில் செழித்திருந்தது.

பாண்டவர்கள் ஐவரும் தமது அரண்மனைக்கு முன்னாள் ஒரு பெரிய மேளம் என்ற மகாபேரி மேளத்தை நிறுவி என்ன தேவையானலும் இம்மேளத்தை அடித்து தன் விருப்பத்தைத் தெரிவிக்கலாம். நாங்கள் அதை நிறைவேற்று வோம் என்று குடிமக்களுக்கு அறிவித்தார்கள்.

இதை அறிந்த ஒரு முதிய பிராமணர் சிறிது பொருள் வேண்டி தலைநகரை நோக்கிச் சென்று இரவு நேரத்தில் அந்த மேளத்தைக் கண்டு, மேளத்தை அடிக்க ஆரம்பித்தார். உறக்கம் கலைந்த யுதிஷ்டிரர் மேளம் அடிப்பது எதற்காக எனக் காவலர்களை அனுப்பிக் கேட்டறிந்தார். அவர் அதிக தூக்கத்தில் இருந்ததால் நடுஇரவு ஆகி விட்டபடியால் அவரது கோரிக்கைகள் முழுமையாக நாளை நிறைவேற்றப்படும் என உறுதியளித்து காலையில் வரச் சொன்னார்.

யுதிஷ்டிரரிடம் இருந்து வந்த செய்தியைக் கேட்டறிந்து ஏமாற்றத்துடன் அந்த பிராமணர் பீமனின் அரண்மனை முன்பாக இருந்த மேளத்தை அடிக்க ஆரம்பித்தார். பீமன் என்ன வேண்டும் எனக் கேட்க, அந்த பிராமணர் நடந்ததைக் கூறி தன் கோரிக்கையை முன் வைத்தார். அதைக்கேட்ட பீமன், தற்போது இரவு வெகுநேரமாகி விட்டது; கருவூலம் திறந்திருக்காது. அதற்காக காலை வரை காத்திருக்க முடியாது. எனவே இந்தத் தங்கக் காப்பை வைத்துக் கொள்ளுங்கள் என தன்னுடைய தங்கக் காப்பைக் கழற்றி பிராமணரிடம் ஒப்படைத்தார்.

விலையுயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்ட அந்தக் காப்பைக் கண்ட பிராமணன் மிகவும் மகிழ்ச்சியடைந்து தன் கிராமத்திற்குத் திரும்பினார்.

பிராமனர் சென்றதும் பீமசேனன் யுதிஷ்டிரனின் அரண்மனையை நோக்கிச் சென்றான். அங்கு மகாபேரி மேளத்தை அடிக்க ஆரம்பித்தார். விண்ணை முட்டும் அளவு சத்தத்தைக் கேட்ட யுதிஷ்டிரர் ஏதோ அசம்பாவிதம் நடந்திருப்பதை உணர்ந்து உடனடியாக மேளம் இருக்கும் இடத்திற்கு வந்தார். அங்கு பீமன் மேளத்தை அடிப்பதை பார்த்ததும் ஆச்சரியமடைந்து பீமனிடம் காரணத்தைக் கேட்டார். ஒரு முதிய பிராமணர் தங்களிடம் உதவி நாடி வந்தால் நாளை காலை திரும்பி வரும்படி கூறினீர். அடுத்த நாள் உயிருடன் இருப்போம் என்று அறிந்த ஒரு மனிதனால் மட்டுமே அவ்வாறு கூற முடியும். தன் தர்மத்தையே ஒரு நாள் தள்ளிப் போட்டீர்கள். அத்தகைய ஞானத்தைப் பெற்று விட்டீர்கள். என் அண்ணன் ஞானத்தைப் பெற்று விட்ட மகிழ்ச்சியில் மூழ்கியிருக்கிறேன். அதனால் தான் இந்த மேளத்தை அடிக்கிறேன் என்றான். காரணத்தைக் கேட்ட யுதிஷ்டிரர் குற்ற உணர்வில் தான் எவ்வளவு

பெரிய தவறு செய்தோம் என்பதை உணர்ந்தார். பீமனை தழுவிக்கொண்டு தன் தவறை உணர்ந்து இத்தவறை இனி ஒருபோதும் செய்ய மாட்டேன் என்றார். பீமன் அவரை ஆறுதல்படுத்தி எனது நோக்கம் உங்களை குறை சொல்ல வேண்டும் என்பதல்ல. தர்மம் செய்யும் போது ஒரு போதும் தாமதம் இருக்கக்கூடாது என்பதற்காகவே இதை செய்தேன் என்றார். பீமனின் உபதேசத்தினால் விழித்துக்கொண்ட யுதிஷ்டிரர் அன்றிலிருந்து தர்மப் பாதையிலிருந்து விலகாமல் இருந்து தர்மராஜா ஆனார்.



# ஜம்மலமடுகு (நாராபுரம்)
# ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

கடப்பா மாவட்டத்தில் ஜம்மலமடுகு அருகில் பென்னை நதி ஓடுகின்றது. இந்நதியின் கிழக்கே நாராபுரத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் புகழ் பெற்றது. பரந்து விரிந்த இடத்தில், ஏற்றமுள்ள பிரகாரத்தின் நடுவில் அமைந்துள்ள கர்ப்பாலயத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி எழுந்தருளி, பக்தர்களுக்கு வேண்டிய வரமளிக்கும் தெய்வமாக திகழ்கின்றார்.

ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு பஞ்சாங்கத்தின்படி வைசாக சுத்த ஏகாதசி முதல் வைசாக மாதம் கிருஷ்ண பக்ஷம் சஷ்டி வரை இந்தத் திருத்தலத்தில் பிரம்மோத்ஸவம் நடைபெறும். இந்த வரிசையில் பிரதமை நாளில் கல்யாணோத்ஸவமும், திருதியை நாளில் திருத்தேரும் கண்ணுக்கு விருந்தாக நடைபெறும். ஜம்மலமடுகு சுற்றியுள்ள பகுதியிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் இப்பிரம்மோத்ஸவத்தில் பங்கு பெறுகிறார்கள்.

இவ்வாலயத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் கட்டப்பட்ட ஸ்ரீபத்மாவதி கல்யாண மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தில் ஆன்மீக நிகழ்ச்சிகளும், திருமணங்களும் நடை பெறுகின்றன. இவ்வாலய வளாகத்தில் கருடனும், ஆஞ்சநேயரும் கொலுவீற்றிருக்கின்றனர்.

குலமத பேதம் இல்லாமல் நாராபுரம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியைத் தரிசிக்க மக்கள் கூடு கின்றனர். கல்யாணோத்ஸவத்திலும் பங்கு பெறுகிறார்கள். மக்கள் அனைவரும் சேர்ந்து திருத்தேரும் இழுக்கிறார்கள்.

ஆந்திர மாநில அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இவ்வாலயம் 2008, அக்டோபர் 23 முதல் திருமலை திருப்பதி தேவஸ்தான மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அன்று முதல் இந்த ஆலயம் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, உத்ஸவங்களையும் சிறப்பாக நடத்தி வருகின்றது. உத்ஸவ காலங்களில் இவ்வாலயம் மக்கள் வெள்ளத்தில் திளைக்கிறது.

# சிறுவர் உலகம்

## பல்சுவை பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



சித்திரப் பகுதி

படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!







மேலே குறிப்பிடப்பட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்குப் பொருத்தமான சித்திரங்களுக்குரிய வட்டத்தில் தகுந்த எண்களை எழுதுங்கள்

1) வாமனருடன் தொடர்புடையவை
2) பலராமருடன் தொடர்புடையவை
3) விநாயகருடன் தொடர்புடையவை

### பாதையைக் கண்டுபிடி

சிறுமி ஆசிரியரை சென்றடைய வழிகாட்டி உதவுங்கள். கணித விடைகள் 9 என்ற எண்ணிக்கையில் வரும் கட்டங்களை மட்டும் இணைத்து பாதையைக் காட்டுங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 +4 | 11 −2 | 10 −1 | 8 −2 | 13 +5 | 13 −6 | 12 +5 | 28 −3 |
| 10 −5 | 6 +3 | 19 −10 | 12 −15 | 14 +3 | 22 −10 | 48 −11 | 19 −2 |
| 5 +4 | 15 −6 | 18 −9 | 17 −8 | 25 −16 | 36 −27 | 1 +6 | 39 −2 |
| 7 +2 | 27 −18 | 8 +1 | 13 −4 | 13 −6 | 25 −16 | 49 −40 | 0 +9 |

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஔவை அருளிய "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

பேசேல் சித்திரம், இரு இனத்து சான்றோர், சக்கர நெறி நில், அகற்று கௌவை, ஒழி கோதாட்டு, விரும்பேல் கொள்கை.

கொள்கை விரும்பேல், கோதாட்டு ஒழி, கௌவை அகற்று,சக்கர நெறி நில்,சான்றோர் இனத்து இரு, சித்திரம் பேசேல்.

# வினாடி வினா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-26

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. ஓணம் பண்டிகையை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் மாநிலம் ................................
2. தொண்டைமான் புரத்தில் வேங்கடவனுக்கு ஆலயம் அமைத்தவர் ................................
3. கைசிகப் பண்ணினைப் பாடியவர் ................................
4. “மாயோன் அன்ன மால்வரை கவா அன்” எனக் கூறும் நூல் ................................
5. தசரதருக்கு தேரோட்டி, மந்திரி, நண்பர் என விளங்கியவர் ................................
6. ஞானப்பிரானை தன் நெஞ்சில் கொண்டவராக மங்கை மன்னனால் குறிப்பிடப்படுபவர் ................................
7. மாவலியிடம் மூன்றடி மண் கேட்டவர் ................................
8. “கலி கெடும் கண்டு கொண்மின்” எனப் பாசுரமிட்டவர் ................................
9. கங்கையிலிருந்து விநாயகரைக் கொண்டு வந்தவர் ................................
10. திருப்பரமேச்சுர விண்ணகரத்தைப் பாடிய ஆழ்வார் ................................
11. மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் அருள் புரியும் விநாயகர் ................................
12. குன்று ஏந்தி குளிர் மழையைக் காத்தவன் ................................
13. விநாயக சதுர்த்தி கொண்டாடப்படும் திதி ................................
14. திருமலை பிரம்மோத்ஸவத்தில் தீர்த்தவாரி நடைபெறும் திருநட்சத்திரம் ................................
15. பலராமராக அவதாரமெடுத்தவர் ................................

### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.09.2024.


**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



## சக்கரத்தைச் சுற்றுங்கள்!


## அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!




**விடைகள்**

1) ஆவணி, 2) முருகப் பெருமான் , 3)கணபதி, 4) மஹாபாரதம்,
5) மூஷிகம்(மூஞ்சுறு), 6)கொழுக்கட்டை, 7)சந்திரன், 8)அருகம்புல், எருக்கம் பூ.

## படத்தைப் பார்ப்போம்! பெயரைக் கண்டுபிடிப்போம்!!





**விடைகள்**

1) பலம்+ராமர் = பலராமர்
2) சேஷ+கிரி = சேஷகிரி

## நீதியை அறிவோம்!

*சித்திரத்தை வரிசைப்படுத்துங்கள். கதையை அறிந்துக் கொண்டு கதை உணர்த்தும் நீதியை அறிந்துக்கொள்ளுங்கள்!*



நீதி : ஆபத்தில் உதவாதவன் நண்பன் அல்ல

## வேங்கடவனே சாட்சி

**சித்திரக் கதை**

கதை மூலம் :டாக்டர் எம். கங்காதர பிரசாத்
சித்திரம் :திரு. கே, துவாரகாநாத்.




எத்தனை நாட்கள் தான் தப்பித்துக் கொள்வாய்? நீதிமன்றத்திலேயே பார்த்துக் கொள்கிறேன்.
ராமய்யா மீதான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.
ராமய்யா மற்றும் நாகபூஷணம் இருவரும் நீதிமன்றத்திற்கு ஆஜரானார்கள்.
உன் தரப்பில் வாதாட வழக்கறிஞர் உள்ளனரா என நீதிபதி கேட்க, நானே வாதித்துக் கொள்கிறேன் என்றான் ராமய்யா.
ஐயா! இந்த ராமய்யா என்னிடம் பணம் பெற்று இதுவரை வட்டியும் அசலும் தரவில்லை. எனக்கு நியாயம் வழங்கிடுங்கள்.
வேங்கடவனே! நீயே என்னை இந்த பொய் வழக்கிலிருந்து காத்திட வேண்டும்.
ஐயா! நான் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே வட்டியை அசலுடன் சேர்த்துச் செலுத்தி விட்டேன்.
ராமய்யா நீ பணத்தினை திருப்பி செலுத்தியதற்கு சான்று உள்ளதா?
ராமய்யா இறைவனை நினைத்தபடி கூறலானான்...
அந்த வேங்கடவனே சாட்சி. பணத்தை எப்பொழுதோ திருப்பி செலுத்தி விட்டேன். நட்பிற்கு நம்பிக்கை துரோகம் செய்வான் என்று நான் நினைக்கவில்லை.
உடனே கடன் உறுதி பத்திரத்தைத் தணிக்கைச் செய்து நீதிபதியும் தீர்ப்பு கூறலானார்.
இப்பத்திரத்தில் வருவாய் முத்திரை வில்லை ஒட்டி கையெழுத்து போடவில்லை. எனவே இந்த கடன் உறுதி பத்திரம் செல்லாது. அதனால் இவ்வழக்கினை தள்ளுபடி செய்கிறேன்.
திருவேங்கடமுடையான்நம்பினவரை கைவிடவில்லை.



சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசிது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: சந்தாதாரர் கையொப்பம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்செண்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877- 2233333 2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம், தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.

மேலும் தகவல்களுக்கு
0877- 2264543, 2264359

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Ph.D., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



16-07-2024 அன்று ஆனிவர ஆஸ்தானத்தை முன்னிட்டு திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பிக்க பட்டு வஸ்திரங்களை சிரசில் சுமந்து வரும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் சுவாமிகளுடன் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் சுவாமிகள், தி.தி.தே. இ.ஓ., திருப்பதி ஜே.இ.ஓ.



22-07-2024 அன்று திருப்பதி அருகில் அமைந்துள்ள அப்பளாய குண்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு நடைபெற்ற புஷ்பயாகத் திருக்காட்சி



29-07-2024 அன்று ஆடிக்கிருத்திகையை முன்னிட்டு திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய ஸ்வாமிக்கு தி.தி.தே. சார்பில் பட்டு வஸ்திரங்கள் சமர்ப்பிக்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். தம்பதியினர்



23-07-2024 அன்று திருமலையில் கல்யாண கட்டாவை தனிக்கைச் செய்து, பக்தர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. ஜெ. சியாமளா ராவ் ஐ.ஏ.எஸ். அவர்களுடன் இணைச் செயலாட்சித்தலைவர் (எச்.&இ) திருமதி எம். கௌதமி ஐ.ஏ.எஸ். அவர்கள்



27-07-2024 அன்று தி.தி.தே. கூடுதல் செயலாட்சித் தலைவராக பதவி பொறுப்பினை ஏற்ற திரு. சி.எச். வெங்கய்யா சௌத்ரி ஐ.ஆர்.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கிடும் திருப்பதி இணைச்செயலாட்சித் தலைவர் திரு.வி.வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள்



07-08-2024 அன்று திரு. எஸ். ஸ்ரீதர் ஐ.பி.எஸ். அவர்கள் தி.தி.தே. கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு அதிகாரியாக பதவி பொறுப்பினை ஏற்றப்பின்னர் குடும்பத்தாரோடு திருவேங்கடமுடையானை தரிசனம் செய்தார்.

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-08-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

